KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஷ ஜனவரி மீ 15உ [No. 2

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 21
2. அப்பர் (வைத்தியம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 23
3. சூளாமணி (உரையுடன்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 25
4. யாப்பிலக்கணம் (அசை) 29
5. மானத சாத்திரம் (உணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 32
6. தனிப்பாடல் (நாமகள்)
நவாலி க. சோமசுந்தரம்பிள்ளை 34
7. வர்த்தமானம் 39

கலாநிலயம்

அகமேபுறம்

கடையாய மாந்தரும் முயல்கின்ற முயற்சியெல்லாம் முடிவினில் நலத்தையும் நயத்தையும் வாழ்க்கையில் பெறவேதான் என்பதை மறுப்பவர் எவருமில்லை. இந்நாள் உலகெங்கணும் நடக்கின்ற பொது நல இயக்கங்களெல்லாம், மாந்தர் அனைவரும் மனிதன் என்ற தனித்தன்மையினும், சமுகம் என்ற பொதுத்தன்மையினும் எல்லாநலமு மெய்திச் சுகமே வாழவேண்டுமெனும் நோக்கமே உடையன. நோக்கம் வரையில் இதிற் குறையொன்று மில்லையாயினும் விழைகின்ற நலமெல்லாம் நமதாகப் பெறுவதற்கவர் பற்றுகின்ற சாதனந்தான் மயங்கச்செய்கின்றது. நலமும் நயமும் ஒரு நிலையேயல்லாமற் புறத்தினின்று கைவரப்பெறும் பொருளன்றெனப் பல முறை கலாநிலயம், மூதறிஞர் துணைகொண்டு விளக்கிக்காட்டியுளது. 'இப்படி யொன்றை யமைத்தால்,' 'இது வொன்றை விலக்கிவிட்டால்,' 'இதுவொன்றை எய்திவிட்டால்' நலமெலாம் வந்துவிடும் என்று வாய் விளம்பி விவகரிப்பதெல்லாம் சொல்லளவில் கேட்பவர்க்குச் சுவையுடையதே யாகலாம். விழைந்தபடி மாறியும் விலகியும், கைவந்துமுள நாடுகளில் வாழ்க்கை நலமெலாம் எய்தியதோ? அல்லலில்லா அமைதி பரவிற்றோ? அங்கு இன்னதற்கு விடையொன்றதேடி நாம் அலையவேண்டா. சில வாரங்களுக்குமுன் பர்னட் ஷா என்னும் அறிஞர், தமது இணையிலாத் திறத்தினாற்றிகழும் வசைமொழிகொண்டு தொழிற்கட்சி அரசாங்கத்தைக் கடிந்ததே விடையாகாதோ! கடைசியில் கடிவதற்கே உரியதாய் அமைகின்ற முறைகளைப் பற்றியே இன்னமும் மாந்தர் தொடர்வாராயின் அவர் பேதைமையைக் கடவுளே காக்கவேண்டும்.

நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும் நிகிலப் பொருள்களுக்கே உரியதோர் இயற்கையோ அல்லது பார்க்கப் பயின்றறியாக் கண்களின் குற்றமோ என்றுநாம் சிறிது தெளியமுயலல் நேரிதன்றோ? தண்ணிய கதிர்வீசி உதிக்கின்ற வெண்ணிலவு கலந்தவர்க்கினியதோர் கள்ளுமாய், பிரிந்தவர்க் குயிர்சுடு விடமுமாய், புலந்தவர்க் குதவிசெய் புதியதூதுமாய் அமைகின்ற விஷயவிகற்பம், விஷயத்தின் பிழையோ, அல்லது விஷயத்தின் பாற்பட்டு விவகரிக்கின்ற மாந்தர்மதியின் மாறுட்டமோ? எனவே விஷய விகற்பங்களுக்குக் காரணம், நமது அகமே யாகும். 'நரகத்தில் சுவர்க்கத்தையும் சுவர்க்கத்தில் நரகத்தையும்' அமைத்துக் கொள்வது உள்ளத்தின் செய்தியென மில்டன் என்னும் பெரும்புலவர் "துறக்கநீக்கம்" என்னும் தமதுபெருங் காவியத்தில்ஓதுகின்றார். கண்ணிலான் பெற்றமைந்தன் உலகத்தில் குற்றத்தையும் குறைகளையுமே காணத் தருமனே நன்மையே கண்டானென வியாஸரும் காட்டுகின்றார். எனின், நிகிலப்பொருள்கள், பார்ப்

பவர் மனமுற்ற பண்பினது அளவிற்கேற்றபடியே நயத்தையும் நிறத்தையும் பெறுகின்றன. இவ் வாய்மையை நமது கலாநிலயத்தில் ஸ்ரீமான் சேஷாசலம் ஐயர்,

ஆல முலகிற் பரந்ததுவோ
ஆழி கிளர்ந்த தோவவர்தம்
நீல நிறத்தை யெல்லாரு
நினைக்க வதுவாய் நிரம்பியதோ
கால னிறத்தை யஞ்சனத்திற்
கலந்து குழைத்துக் காயத்தின்
மேலு நிலத்து மெழுகியதோ
விளைக்கு மிருளாய் விளைந்ததுவே

என்னும் கம்பர்பிரான் செய்யுளின் துணைகொண்டு விளக்கியுள கட்டுரையின் ஓர் பாகத்தை ஈண்டு வரைகின்றோம்:—

"ஏழை சீதை, கடுவோ, கடலோ, காலன் மேனியோ, மற்றுக் கருநிறமமைந்து கொடுமை செய்த பொருள்களில் யாதோ இவ்விருள் என நைவாளாயினள். இதனோடு நின்றிருப்பாளாயின் புலவர்பெருமான் கையில் வளர்ந்த சீதையின்பால் சிறப்பொன்றும் தோன்றியிராது. இதுவரை வந்த அந்தியின்வர்ணனைகளில் தற்குறிப்பேற்றமாய்ச் சீதையைக்கொண்டு செய்வித்த உருவகம் பெரும்பான்மை மற்றக் கதைகளின் நாயகிகளது கூற்றுடனும் ஒக்கும்.

"ஆனால், கோமுனிஎனத்தகைய ஜனகன்தன் நற்றவத்தால்வந்த நங்கை, காதலால் உடலும் மனமும் மெலிருந்திருந்தாளாயினும், நிரந்தரமாய அரும் பெருந் தத்துவங்களைத் தன் கருத்தினின்று தளரப் போக்கினாளல்லள். "அவர்தம் நீல நிறத்தை எல்லாரும் நினைக்க அதுவேயாய் நிரம்பியதோ" என்று இருளைநோக்கி ஐயுறவெய்துதற்கியன்ற தன்மை இச் சீதையல்லால் பிறர்க்கிருக்கக் காண்பதரிது. உலகினது தோற்றம் மாறுவதும் அமைவதும் ஒருசிலர் சேர்ந்து செய்கின்ற செயல்களாலேனும் வழங்குகின்ற வார்த்தைகளாலேனும் ஆவதொன்றன்று. அகமே புறம். எண்ணங்களுக்கு, உருவமும் சக்தியும் புறத்திலே பரவிப் பயில்கின்ற தன்மையும், உள. ஆதலின் ஒருகாலத்தில் மாந்தருள் பெரும்பகுதியோர் நினைக்கின்ற நினைவுகளின் தொகுதியே வெளியிற் கழன்றுலவி ஒன்றுய்த்திரண்டு உலகத்தின் வாழ்க்கைக்கோர் உருவந் தருகின்றது. சான்றவர் தம் சிந்தனையால் உலகத்தை இன்பநலங்களுக் கியன்றநெறியில் யில் உய்க்கின்ற திறம் கையும் வாயும் வல்லுநர்க்கிலது. பெரும்பகுதியோர் சுயநலப் பேராசையெனும் பெரும்பேயையே தம் மனத்தில் நினைத்திருப்பராயின் உலகத்திலெங்கும் அப்பேய்தானே தன்னினத்தோடும் பரவிப் படரும். மற்று ஈச்வர நினைவு நீங்காத உள்ளத்தவர் அதிகமாயின் உலகெங்கும் வியாபிப்பதும் ஈச்வர ச்வரூபமே யாகும். உலகத்தில் நன்மையுளதெனின் அது சான்றோர் நல்நினைவின் தோற்றமே யன்றி யாவர்தம் செயலாலும்சொல்லாலும் நேர்ந்ததன்று. நல்லன நினைக்க வல்லார் யாதும் செய்யவேண்டியதில்லை. அல்லாதார் செய்தும் பயன்படாது. நம்முடைய நினைவை மாத்திரம் நாம் வெளியுலகில் காண்கின்றோமென்பதில்லை. பிறரது நினைவையும் காணக்கூடும். மானத தத்துவம் இது. இதனை அறிவாள் சீதை. பொய்யில் காட்சியுடைய நல்லோர் ஈச்வரனைத் தமது அன்பினால் கண்டு, அவ்வுருவத்தைத் தம் உள்ளத்தில் ஊன்றித் தியானித்து உலகத்திலெங்கும் அவ்வீச்வரனாகவே வியாபிக்கும்படி தமது எண்ணத்தை உலவவிடும் தனிப்பெருந் தகைமையை, நற்குணர் வாளாதலால் அச் சனகன்குலமகள் காலனும் கடலும் கடுவுங்கிடக்க எம்பிரானை யாவரும் நினைத்த நினைவின் உருவமும் நிறமுமேயோ இப்படரிருள் என அயிர்ப்பதற்கு ஏற்றவளாயினள்.

எனவே மாந்தர்களது அகமேபுறத்தினில் பிரதிபிம்பிக்கின்றது. இந்தஉண்மையைமாந்தர்உணராவண்ணம் கண்ணிற்கும் காணப்படு பொருளிற்கும் இடையே அறியாமை விரிக்கின்ற மாயத்திரையகல முயலுவமேல், பின் துன்பமும் துக்கமும் வாழ்வுகழன்றுதானே யகலாவோ! பரபஞ்சப் பொருள்களிலெல்லாம் மூலத்தின் கைவண்ணம் திகழுகையில், அதனில் துக்கத்தைகாணின் காணுபவர் கண்ணழிய அழவே வேண்டும். நாம் ஒன்று செய்ய முயல்வதனினும், ஆன்றோர் துணை கொண்டு சிந்தித்துச் சும்மாவிருப்போமானால் அரியாமை விரித்ததிரை கதிர்ப்படு பனி யன அகலத் தருமனாய் நாம்மாறி நன்மையையும், அழகையும், இன்பத்தையும் கண்டு உய்யலாம். அவ்வண்ணம் உய்ந்திடவே, பாரசீகக் கவிவரன் உமார்கயாம்,

A Book of Verses underneath the bough
A Jug of Wine, a loaf of bread—and thou
Beside me singing in the *Wilderness*—
Ah ! Wilderness were Paradise enow!

[காட்டினிலோர் கிளைநிழ லமர்ந்து பாடற் புத்தகமொன்று, நறவின் சாடியொன்று, உண்ணும் பண்டமொன்று, நல்லாய் நீயும் என்னருகில் இன்னிசை பயின்றிருக்க, ஆகா! இத்தூறே துறக்கமாதற்குப் போது மன்றோ]

என்று பாடி மகிழ்கின்றார். ஆண்டு பலவாக முயல்கின்ற மாந்தர், அன்னோர் பொன்னுரைகளை ஏற்றுச் சிறிது சும்மாவிருந்து பார்த்தலும் ஆகாதோ!

அறிக்கை:—

புதுவருட சந்தாப் பணத்தை வி. பி-க்குக் காத்திராது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். புதிய ஆண்டு முதல் வி. பி. களை மூன்று நாட்களுக்கு மேல் தபால் நிலயத்தார் வைத்துக்கொள்ள மாட்டார்களாதலால், மணியார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துவது எமக்கு மிகவும் உதவியாக விருக்கும். வி. பி. அனுப்ப நேருங்கால், தாமதம் செய்யாது பணம் கட்டிப் பத்திரிகையை ஏற்றுக்கொள்ளும்படி நேயர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

16. வைத்தியம்.

[5-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) தமிழர் வைத்தியத்தின் அடிப்படை

தேகத்தை நலியச்செய்யும் வினைகள் நான்கு. அவையாவன:—வெப்பு குளிர் வாதம் மிகையான பித்தம், என்பனவேயாம். வெப்பே குளிருக்கு (குளுமை என உலகவழக்கில் கூறப்படுவதற்கு) காரணமாம். வாதமென்பது உட்கொண்ட பிராண வாயு, தேகத்தினுள்ள அசுத்தங்களைப் பரிசுத்தமாக்கிய பின்னர் மலவாயுவாய் வெளியே வாராது தேகத்திலேயே தங்கியிருக்கு மொரு நிலையாகும். இது சாதாரணமாய் ஓடும் பிராணவாயுவின் ஓட்டத்திற்கு இடையூறுப்சிறிது நிற்கும். பித்தமென்பது ஈரலில் சுரக்கும் ஒருவித ரத்த சாரம். இதுவே உணவுப்பொருள்களில் நெய்ப்பண்டங்களைச் சீரணிக்கச் செய்வதுடன் குடலைச் சுத்தஞ்செய்து,வயிற்றிலுள்ள கெட்ட வஸ்துக்களைவெளியிற்செலுத்திவிடும். அவற்றுடன் தானும் வெளியாகும். இவ்வாறு இது வெளியாகாது தேகத்திற் றங்குமாயின் 'மிகையான பித்தம்' ஆகி பலவித வியாதிகளை அவயவங்களுக்குத்தக்கவாறு உண்டாக்கும். கண்ணில் தங்கினால் பார்வையை மந்தப்படுத்தும் வியாதிகள் உண்டாம். காதிற் றங்கின் செவிடு, காது குத்தல், சீ வடிதல் முதலியனவாம். சுவாசாசயத்திலிருப்பின் காசம் க்ஷயம் முதலியன ஏற்படும். இருதயத்தில் அல்லது ரத்தத்திலிருப்பின் காமாலை கட்டி முதலியன ஏற்படும்.இவ்வாறு எவ்வித வியாதியும் பித்தசம்பந்தமின்றி நிலைக்காது. ஆயினும் பித்தமோ முன்கூறியவாறு தேகத்திற்கு அவசியமானது. "பித்த மொடுங்கிடிற் பேசாமற் போய்விடும்," அச் சிவன். ஆகையால் வாதம், பித்தம், வெப்பு, குளிர் மிகைப்படாமல் நின்றாலொழிய தேகம் சலனமுற்று ஓடாது.

மேற்கண்ட தத்துவங்களை அறிவதற்கும் சிகிச்சை செய்வதற்கும் ஏற்பட்ட கலையே வைத்தியமாகும். ஆங்கிலேயர் முதலிய மேல் நாட்டவர்கள் இரத்தப் பரீட்சைக்காகப் பூதக்கருவியும் (Microscope) வாதப்பரீட்சைசெய்வதற்கு சுவாஸநிர்ணயக் கருவியும் (Stethoscope),வெப்பு-குளிர் அறிவதற்கு உஷ்ண அளவைக் கருவியும் (Thermometer) ஏற்படுத்தியுள்ளார். இக்கருவிகள் இன்றேல் இவர்களுக்குத் தேகத்திலுள்ள வாத பித்த சிலேத்தும தத்துவங்களை யறிய வகை யாதுமில்லை. நம்மனோர்க் கவ்வாறன்று. அவர்களது பரிசஉணர்ச்சியே இந்தக்கருவிகளாய்ப் பயன்பட்டது. ஆண்மக்களுக்கு வலது மணிக்கட்டையின் புறத்திற்கு இரண்டங்குலத்தில் வலது பெருவிரலுக்கு நேரிலும், பெண்மக்களுக்கு இடது மணிக்கட்டையின் புறத்தில் இரண்டங்குலத்தில் இடதுபெருவிரலுக்கு நேரிலும் ஓடும் இரத்த நரம்பில் மூன்று விரல்களை யழுத்தி பொன்றன்பின் ஒன்றாய் வாத, பித்த, சிலேத்தும ஓட்டங்களைக் கவனித்து வியாதி இவ்வாறு தேகத்திலிருக்கு மென்பதை அநுமானிப்பர். நோயாளி தன் நோய் இன்னதென்றும் கூறவேண்டியதில்லை - காலையில் பித்த நாடியாலும் மத்தியானத்தில் சிலேத்தும நாடியாலும், மாலையில் வாதநாடியாலும் பெரும்பாலும் தேக தத்துவ நிலை யுணர்வார். இவ்வித்தை மிகவும் கடினமானதன்று. 4, 5 மாதப் பழக்கத்தில் சிற்றறிவு பெற்ற ஒருவனும் சரிவரக் கவனித்து வருவானாயின், கையைப் பிடித்துப் பார்த்தவளவிலேயே ஒரு கஷ்டமுமின்றித்தேகத்தில் இது அதிகம், இது குறைவு என்பதைப் பகரவல்லவனாவான். கை தேர்ச்சியடையவும் அநுபோகமும் அறிவும் முதிரவும் வியாதியின் இலக்கணங்கள் நாடிகளின் நிலையாலறிந்து செவ்வனே பகரலாகும். அத்தகைய பண்டிதர்கள் சிற்சிலரை இக்காலத்திலுங் காண்கின்றோ மன்றோ?

தேகத்தில் ஓடும் வாத பித்த வினைகளின் இலக்கணம் நாடியைப் பரிசித்து உணர்வதுடன், அந்தப்புரங்களிலுள்ள இராஜஸ்திரீகள் பட்டுக்கயிற்றைப் பற்றிக்கொள்ளவும், அக்கயிற்றைச் சபையிற் கட்டி வைக்கவும், அக்கயிற்றைப் பரிசித்து நாடிப் பரிக்ஷை செய்யும் நிபுணர்களும் முற்காலத்திலிருந்ததாக அறிகின்றோம். இவ்வாறு பழக்கத்தால் செய்தவை ஆச்சரியமன்று. ஏனெனில் போகும் பிராணனையும் அரைநாழிகை நிறுத்திவைப்பதுடன், தேகிடம் கொடுத்துப் பேசவைக்கும் வைத்தியர்களுக்கு இப்பழக்கம் இன்றியமையாததே. ஆயினும் நமது வைத்தியக்கலை க்ஷீணதசைக்கு வந்தகாலத்தில், தக்கோரும் தகாதோரும் வயித்தியராய் வெளிவர இக்கலையின் அந்தம் குன்றியது.

நமது முன்னோர் வைத்தியனுக்கு நான்கும், வித்வானுக்கு மூன்றுமே வேண்டுமென்பர். அவையாவன:-வித்துவானுக்குக் கம்பன், குறள், கோவையென்பன. கம்பராமாயணமும், திருவள்ளுவப் பயனும், திருக்கோவையாரும் ஒருவன் செவ்வனே கற்பின், அவனை வித்துவானெனக் கூறலாமென்று நமது முன்னோர் மொழிவதுபோல், உலகத்திலுள்ள எல்லா வியாதிகளுக்கும் சிகிச்சைசெய்ய முயல்வதில் நான்கு தொழில்கள் செவ்வனே நடாத்த உணர்ந்திருக்கின்ற அவனைப் பெரிய வைத்தியனென்று எண்ணி மதிக்கலாம். அவையாவன:-கட்டல், அவிழ்த்தல், கோளுத்தல், அவித்தல் எனப்படும். கட்டலாவது நவத்துவாரங்களில் ஒழுகும் பெருக்கை நிறுத்துவது. அவிழ்த்தலாவது வெளிவரும் மலம்சிக்கித் தடைப்பட்டிருப்பின் அதனைவெளியாக்குவதும்,நவத்துவாரங்களின் அடைப்பை நீக்கி அவற்றின்வழி வரவேண்டிய கெட்டநீரை வெளிப்படுத்துவதுமாம். கோளுத்தலாவது, தேகத்திலிருக்கவேண்டிய வெப்பம் குறைவுபடின், சூட்டை உண்டாக்கித் தேகத்தைச் சரிப்படுத்தல். இரத்தஓட்டத்தின் வேகம் குறைவுபடின் குளிர் நேரும். இது உலகத்தில் நாம் வசிக்கும் ஆகாயத்தில் காற்றின் தொந்தம் குறைந்தவுடன் சண்டமாருதம் வருவதுபோல் குளிரே, சுரம்

முதலிய வெப்பநோய்களுக்குக் காரணமாகும். ஆதலால் தேகத்தில் சற்றும் வெப்பம் குறையாது காத்தலே வைத்தியத்தின் முன்னேற்றமாகும். அதையே கொளுத்தலென்பர். அவித்தலாவது வெப்பநோய்களைத் தணித்தல். இவ்வாறு பகரப்படும் நால்வகைத் தொழிலும் கற்று மூவகை நாடியும் அறிவானுயின் ஒருவன் வயித்தியக்கலையில் நிபுணனெனக் கொள்ளப்படுவன். மேற்கண்ட கட்டல், அவிழ்த்தல், கொளுத்தல், அவித்தலென்னும் தொழில்களுக்கு எவ்வித வகுப்புகளிற் சிகிச்சைகள் நம் முன்னோர் செய்தனரென்பதைத் திருநாவுக்கரசுநாயனுர் தேவார வாயிலாக ஆராய்வோம்:—

அப்பர், வைதீச்வரன்கோயில் என்னும் திருப்பதியில் வைத்தியமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான் சந்நிதானத்தில் பாடிய திருத்தாண்டகப் பதிகத்தின் ஒரு பாசுரத்தில் நோய்களுக்குச் சிகிச்சைமுறை மூன்றுவகுப்பிற் படுமென்றும், அவை மந்திரம் தந்திரம் மருந்து என்பன என்றும் உணர்த்துகின்ருர். அவற்றின்வண்ணம் நாமும் காண்போம்:

பேரா யிரம்பரவி வானே ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா வடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்க டீயெழுத்தின் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கும் வேளு ரானைப்
போற்ருதே யாற்றநாள் போக்கி னேனே.

திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருத்தாண்டகம் 8.

(iv) பிணி தீர்க்கும் முறைகள்

1 மந்திரம்:—இதை மேல்நாட்டுச் சாஸ்திரிகள் பல காலம் நம்பவில்லை. ஆனல் இப்போது வைத்தியசாஸ்திரத்தில் ஒரு பாகமாக அமெரிக்கா முதலிய பிரதேசங்களில் பாடசாலைகளிற் மந்திரம் கற்பிக்கப்படுகின்றது. இது (Hypnotic treatment) நித்திரை மார்க்க முறையெனப் பகரப்படும். அதாவது சிறிது நித்திரை வருவித்து மந்திரிப்பவன் மனதையும் நோயாளி மனதையும் தழுவச்செய்தபின் மந்திரிக்கும் வைத்தியன் நோயாளி மனதிற்குச்"சிறிது நேரத்தில் நீஎழுந்து நடப்பாய். இதைச் செய்வாய், அதைச் செய்வாய், நோய் காணுமற் போய்விடும்" என, முன்னிலையின்றிப் படர்க்கைவினையில் கட்டளையிடுவதாகும். பிணியன் மனது படர்க்கையிற் கொண்ட விஞ்ஞாபனம், தேகத்தில் முன்னிலையாய் மாறித் தவருமல் கட்டளை நிறைவேற்றும். ஆனல் இருவர்மனதும் கலந்துநிற்கவும் கட்டளை சுத்தமாய் ஏற்கவும் செய்வதற்குப் பல தந்திரங்களும் உள. ஆயினும் இருவரும் மனச்சுத்த முடனிருப்பின் யாதொரு கடினமும் சிகிச்சையில் இராது.

மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தெ னுள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பி லானை
யிமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்
கருந்தான மதக்களிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண் டூேர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் ருடி னேனே.

திருவானைக்கா: திருத்தாண்டகம் 2.

என்னும் அப்பர் பாசுரங் காண்க. சுத்தமான இருதய கமலத்தில் சிவபெருமான் வீற்றிருப்பதால் மந்திரத்தால் சிகிச்சை செய்யவல்லவர் மனதில் இறைவன் இருப்பானென்பதும், அவ்வாறிருந்தே பிணிதீர்ப்பானென்பது மமையும். இனி மந்திரமாவது யாது? "சிவாய என்ற அட்சரம் சிவனிருக்கு மட்சரம்" என்பர் மேலோர்.

நமச்சி வாயவென் பாருள ரேலவர்
தமச்ச நீங்கித் தவநெறி சார்தலால்
அமைத்துக்கொண்டதோர் வாழ்க்கையனுகினும்
இமைத்து நிற்பது சால வரியதே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 22.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

தனித் - திருக்குறுந்தொகை 2.

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓது மஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமு மகிழ்வர்மாற் பேறரே.

திருமாற்பேறு - திருக்குறுந்தொகை 1.

பஞ்சாட்சரத் திருமந்திரத்திற்குச் சிறந்த மந்திரமில்லை யெனினும், அதை ஓதுவோர் சித்தசுத்தத்தைப் பெருரெனின், அது யாதொரு பயனும்தாராது:

தூயானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத்
தோன்றிய வெவ்வுயிர்க்குந் துணையாய் நின்ற
தாயானைச் சக்கரமாற் கீந்தான் தன்னைச்
சங்கரனைச் சந்தோக சாம மோதும்
வாயானை மந்திரிப்பார் மனத்து ளானை
வஞ்சனையா லஞ்செழுத்தும் வழுத்து வார்க்குச்
சேயானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின்ருரே.

திருவீழிமிழலை - திருத்தாண்டகம் 4.

ஆகையால் பஞ்சாட்சர வெழுத்துக்களைச் சொல்லுவது எவ்வாறு செப்பினும் மந்திரமாய்ப் பிணிதீர்க்குமென்று எண்ணலாகாது.

பற்பல காலம் பயிற்றிப் பரமனைச்
சோற்பல காலநின் றேத்துமின் றொல்வினை
வெற்பிற் றோன்றிய வெங்கதிர் கண்டவப்
புற்ப னிக்கெடு மாறது போலுமே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 23.

இவ்வாறு பயின்றுவருவது மிகவும் கடினமான காரியமே. ஏனெனில்

நெஞ்சி லேவர் நினைக்க நினைக்குருர்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்
றஞ்சி நாண்மலர் தூவி யழுதிரேல்
வஞ்சம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே.

திருவான்மியூர் - திருக்குறுந்தொகை 6.

திருவருள் நினைந்து அழுவோர்க்கே அவன்கருணை உதிக்கும். ஏனையோர்க்கு வாட்டந் தீர்க்கும் வகையில்லை.

வெள்ளை ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்கும்வே ளூரான் போற்கழல்
உள்ளி ருக்குமு ணர்ச்சியி லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே.

*   *   *

அருமறையனை யானொடு பெண்ணனைக்
கருவி டமிக வுண்டவெங் கண்டனைப்
புரிவெ ணூலனைப் புள்ளிருக் கும்வேளூர்
உருகி நைபவ ருள்ளங் குளிருமே.

திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருக்குறுந்தொகை 1& 3.

மற்றும்,

செம்மைவெண் ணீறுபூசும்
சிவனவன் றேவதேவன்
வெம்மைநோய் வினைகள்தீர்க்கும்
விகிர்தனுக் கார்வ மெய்தி
யம்மைநின் றடிமைசெய்யா
வடிவிலா முடிவில்வாழ்க்கைக்
கிம்மைநின் றுருகுகின்றே
னென்செய்வான் றோன்றினேனே.

குறைந்த திருநேரிசை 5.

அள்ளலைக் கடக்க வேண்டி லரனையே நினைமி னீர்கள்
பொள்ளலிக் காயந் தன்னுட் புண்டரீ கத்தி ருந்த
வள்ளலை வான வர்க்குங் காண்பரி தாகி நின்ற [வாறே
துள்ளலைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்ட

திருத்துருத்தி - திருநேரிசை.

எனவே பஞ்சாட்சர மந்திரமோதும் சிலர் மனதிற் குடிகொண்ட பெருமானார், வேண்டும் கருமம் யாவும் முடிப்பாரென்பதற்கு ஐயமுண்டோ? இம்மந்திரமே அஸ்திரம்போல் * எதிரிகள்மேல் பிரயோகிக்கப் பயன்படுமென்பதைச் சம்பந்தர் சரித்திரத்தில் "அத்திரமாவது அஞ்செழுத்துமே" என்னும் சொற்றொடர் புத்தநந்தியின் தலையைச் சிதறச்செய்த கதையால் அறிகின்றோமன்றோ. இப் பஞ்சாட்சரம் ஸ்தூல பஞ்சாட்சரமென்றும், சூக்கும பஞ்சாட்சரமென்றும், காரண பஞ்சாட்சரமென்றும் ஆன்றோர் வகுத்தனர். பஞ்சாட்சரத்தை நோய்நீக்குவதற்கு உபயோகிப்பது "ஊர்க் குருவிமேல் இராமபாணம்" என்னும் பழமொழி யொக்கும். இனிவரும் கலைகளான வாயு ஸ்தம்பனம், அக்னி ஸ்தம்பனம், கட்க ஸ்தம்பனம் முதலிய கலைகளின் உச்சிக்குச் செல்லும் உபாயம் கொடுக்கும் இத் திருமந்திர விஷயம் பின்னர் விரிவாய்க் காட்டப்படும். ஆயினும் வைத்தியத்தில் முன்வினையின் தீராக் கருமவியாதியெனவும் எம்மருந்தாலும் நீங்காதெனவும் பண்டிதர் கைவிட்ட வியாதிகள் யாவும், இத் திருமந்திரம் செபித்தக்கால் தேவர்கள் உய்யுமாறு கடலின் விஷத்தையுண்ட பெருமானார் திருவருளால் தீருமென்பது திண்ணம்:—

காரார் கடனஞ்சை யுண்டார் தாமே
கயிலை மலையை யுடையார் தாமே
யூரா வேகம்ப முகந்தார் தாமே
யொற்றியூர் பற்றி யிருந்தார் தாமே
பாரார் புகழப் படுவார் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
தீராத வல்வினைநோய் தீர்ப்பார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே.

திருவாலங்காடு - திருத்தாண்டகம் - 9.

இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்
அருந்த வந்தரு மஞ்செழுத் தோதினற்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே.

திருமாற்பேறு - திருக்குறுந்தொகை 4.

பிறர்நோயைத் தீர்ப்பதற்குமாத்திரம் • பஞ்சாட்சரம் பயன்படுமென்று எண்ணலாகாது. தமது நோயைத் தாமே நிவர்த்திக்கவும் இது †கருவியாகும். இதை ஆங்கிலத்தில் (Auto Suggestion) ஆடோ சஜெஸ்டியன் என்று நித்திரைச்சிகிச்சை முறையில் காட்டுவர். ஆனால் அவ்வழி அகம்பாவனையால் (Ego) நிலைபடுவதில்லை. சைவமுறையில் ஏற்பட்டவாறு செல்லல் இராஜவீதியிற் செல்லலொக்கும்:—

சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றார்பிணி தீர்த்தருளாய்
மத்தத் தரக்க னிருபது தோளு முடியு மெல்லாம்
பத்துற்றற நெரித்தா யெம்மை யாளும் பசுபதியே.

பசுபதி - திருவிருத்தம் 10.

* பதத்தெழு மந்திர மஞ்செழுத் தோதி பரிவினொடு
மிதத்தெழு மாணித னின்னுயி ருண்ணவெ குண்டடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு திப்புன லாறொழுக
வுதைத்தெழு சேவடி யான்கட வூருறை யுத்தமனே.

திருக்கடவூர் - திருவிருத்தம் 2.

† படைக்கல மாகவுன் னாமத்
• தெழுத்தஞ்செ னாவிற் கொண்டே
னிடைக்கல மல்லே னெழுபிறப்
பும்முனக் காட்செய் கின்றேன்
றுடைக்கினும் போகேன் றொழுது
வணங்கித் தூநீறணிந்து
னடைக்கலங் கண்டா யணிதில்லைச்
சிற்றம்பலத் தரனே.

கோயில் திருவிருத்தம் 8.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[7-வது பக்கத் தொடர்ச்சி]

வேறு.

12\. முன்றி லெங்கு முருகயர் பாணியும்
சென்று வீழரு வித்திர ளோசையும்
வென்றி வேழ முழக்கொடு கூடிவா
னென்றி நின்றதி ரும்மொரு பாலெலாம். 7.

ஒரு பால் எலாம் - (குறிஞ்சி என்னும்) ஒரு பக்கம் எல்லாம், முன்றில் எங்கும்-முற்றங்கள் எங்கும், முருகு - தெய்வம் (வந்தவர்களை), அயர் - ஆட்டுதலைச் செய்கின்ற, பாணியும் - வாத்தியங்களின் ஓசையும், சென்று வீழ் - சென்று விழுகின்ற, அருவித்திரள் - அருவிக்கூட்டங்களின், ஓசையும்-ஓசையும் வென்றி - வெற்றியமைந்த, வேழம் - யானைகளின், முழக்கொடு - ஆரவாரத்தொடு, கூடி - சேர்ந்து

வான் - ஆகாயத்தை, ஒன்றி - அடைந்து, நின்று - இடைவிடாமல், அதிரும்-சப்திக்கும்.

இச்செய்யுள் குறிஞ்சித்திணைக்கேற்ற ஓசைகளையே கூறியதாதலால் 'முருகயர் பாணி' என்பதற்கு வேடுவர் தெய்வமாட்டும் அரவம் எனப் பொருள் கூறினோம். "முருகு' என்பது தெய்வம் எனும் பொருளில் வருவதை 'முருகு மெய்ப்பட்ட புலைத்தி' என்னும் புறநானூற்றுத் தொடரிலும் காணலாம். முருகு எனும் சொல்லிற்குத் திருவிழா என்றொரு பொருளுண்டாயினும் அது மருதத்திற்கே பொருந்தும். வெறியாட்டல் குறிஞ்சிநில மாக்களின் தொழில்களுள் ஒன்று.

——

13. ஏறு கொண்டெறி யும்பணைக் கோவலர்
கூறு கொண்டெழு கொன்றையந் தீங்குழல்
காறு கொண்டவர் கம்பலை யென்றிவை
மாறு கொண்டுசி லம்புமோர் மாடெலாம். 8.

ஓர் மாடு எல்லாம் - (முல்லை என்னும்) ஒரு பக்கம் எல்லாம்—(இடையர்) ஏறு - எருதுகளை, கொண்டு-பற்றித்தழுவி, எறியும் -(பொருது) சாய்க்கும் (காலத்தில் அடிக்கும்), பணை - பறைகளும், கோவலர்-இடையர்களது, கூறுகொண்டு - (இசையின்) வகையறிந்து, எழும் - எழுப்பப்படும், கொன்றை அம் தீம் குழல் - கொன்றைப்பழத்தால் செய்த இனிய குழல்வாத்தியமும், காறு - கலப்பைகளை, கொண்டவர் - கொண்டு உழுபவர்களது, கம்பலை - முழக்கமும், என்று இவை-என்னும் இவ்வொலிகள், மாறு கொண்டு - மாறி மாறி, சிலம்பும் - ஒலிக்கும்.

வலியமைந்த காளைமாடுகளைப் பற்றித்தழுவி யடக்குதல் முல்லைநில வாலிபர்களின் செயல்களுள் ஒன்றுதலால் 'ஏறு கொண்டெறியும் பணை' என்பதற்கு இங்குக் கூறியபொருள் பொருந்தும். முதிரை முதலியன விளைத்தலும் முல்லைக்குரியது; அதன் நிமித்தம் சிலர் காறுகொண்டுளர். கொன்றைக்குழல் இடையர்க் கமைந்த வாத்தியம்.

——

14. அணங்க னாண வாடன் முழவமுங்
கணங்கொள் வாரணக் கம்பலைச் செல்வமும்
மணங்கொள் வார்முர சும்வய லோதையு
மிணங்கி யெங்குமி ருக்குமோர் பாலெலாம். 9.

ஓர் பால் எல்லாம் (மருதம் என்னும்) ஒரு பக்கம் எல்லாம், அணங்கு அனார் - தெய்வமகளிர் போன்ற மாதர், அணவு ஆடல்-சேர்ந்து விளையாடுகின்ற, முழவமும் - சப்தமும், கணம்கொள் - கூட்டமான, வாரணம்-சங்குகளினது, கம்பலை-சப்தத்தின்(காரணமான), செல்வமும் - (நீர்வளத்தின்)மிகுதியும், மணம் கொள் - கலியாணத்திற்குரிய, வார் - வாரால் கட்டிய, முரசும் - முரசுகளின் ஒலியும், வயல் ஓதையும் - வயலிலே (ஏரடித்தல் முதலிய தொழில்களுக்குரிய) ஓசையும், இணங்கி - சேர்ந்து, எங்கும் இருக்கும் - எங்கும் இருக்கும்.

——

15. கலவ ரின்னிய முங்கட லச்சிறார்
புலவு நீர்ப்பொரு பூணெறி பூசலும்
நிலவு வெண்மண லீனிருங் கானல்வா
யுலவு மோதமு மோங்குமோர் பாலெலாம். 10

ஓர் பால் எல்லாம் - (நெய்தல் என்னும்) ஒருபக்கம் எல்லாம், கலவர் - நெய்தல்நிலமாக்களது, இன் இயமும்-(நாவாய்ப்பறை மீன்கோட்பறை ஆகிய) இனிய வாத்தியங்களின் ஒலியும், கடல - கடலைச் சேர்ந்தவர்களான, சிறார் - சிறுவர், புலவு - புலால் நாற்றமுடைய, நீர் - நீரினுள், பொரு - (விளையாட்டாகத் தம்முள்)பொருகின்ற (காலத்தில்), பூண்-(தமது) ஆபரணங்களை, எறி- (ஒருவர்மேல் ஒருவர்) எறியும், பூசலும் - ஆரவாரமும், நிலவு - நிலவைப்போன்ற, வெண்மணல் - வெண்மணல் (விரிந்த), நீள் - விளங்குகின்ற, இரும்-பெரிய, கானல்வாய்-சோலையினிடத்தில், உலவும்-உலவுகின்ற, ஓதமும்- அலைகளின் ஓசையும், ஓங்கும் - மிகுந்தெழும்.

சந்திரிகை வெண்மணலிற்கு உபமானமாவதை

தண்ணக் கடலிற் றளிசிந்து தரங்க நீங்கி
விண்ணிற் சுடர்வெண் மதிவந்தது மீன்கள் சூழ
வண்ணக் கதிர்வெண் ணிலவின் றிரள் வானுகத்தோ
டொண்ணித்திலமீன் றொளிர்வால்வளையூர்வதொத்தே.

எனும் கம்பராமாயணச் செய்யுளிற் காணலாம்.

——

16. கைவி ரிந்தன காந்தளும் பூஞ்சுனை
மைவி ரிந்தன நீலமும் வான்செய்நாண்
மெய்வி ரிந்தன வேங்கையுஞ் சோர்ந்ததே
னெய்வி ரிந்தன நீளிருங் குன்றெலாம். 11.

நீள் இரும் குன்று எலாம் - உயர்ந்த பெரிய மலைகளில் எல்லாம், (மாதர்களது) கைவிரிந்து அன - கை விரிந்தது போல, காந்தளும் - (சிவந்த) காந்தள் மலர்களும், பூ சுனை - அழகிய சுனைகளில், மை - (அவர்கள் அணியும்) அஞ்சனம், விரிந்து அன - பரவியது போல, நீலமும் - (கரிய) நீலோற்பல மலர்களும், வான் செய் நாண்-(அவர்களுக்குரிய) சிறப்பமைந்த நாணம், மெய் - (அவர்களது) சரீரத்தில், விரிந்து அன - பரவியதைப் போல, வேங்கையும் - (பொன்னிறமான) வேங்கை மலர்களும், சோர்ந்த-சொரிந்த, தேன் நெய்-தேனின் வகைகள், விரிந்தன - பரந்தன.

காந்தள்மலரை மாதர்கைக்கு உவமையாய், "மாதரெரிமணிக் கடகம்வாங்கிக் காந்தளம் போதிற்பெய்து கைகளோ டொப்புக் காண்பார்" என்று கம்பரும் கூறியுளார். மாதர்களுக்குரிய கை மை மெய் இவைகளைக் கொண்டே குறிஞ்சிக்குரிய பூக்களைக் கவி வருணித்திருக்கின்றார். ஆதலால் 'வான் செய் நாண் மெய் விரிந்தன வேங்கை' என்பதற்கு மேற்கண்டவாறு பொருள் கூறினோம். மகளிர்க்கு வேட்கையுண்டான காலத்து நாணும் தோன்றுமெனும் கருத்தைக் "காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென், னோனா வுடம்பி னகத்து" என்னும் குறளிலும் அதற்குப் பரிமேலழகர் வரைந்த உரையினுங் காணலாம். வேங்கைமலரின் நிறம் பசலையென்பதும், வேட்கையால் பசலைபூக்குமென்பதும் பிரசித்தம். இனி, "மாதர்க்கு மங்கலச்சிறப்பைச் செய்கின்றபொற்றாலி நாணினோடு மெய்யில் பரந்ததுபோல் பூத்தவேங்கை''என்று இத்தொடர்க்குப்பொருள்கூறினுமமையும். ''பாசிப்பாசத்துப் பைம்பொன்னிரைத் தாலி பூத்த வேங்கை" எனச் சிந்தாமணியின்கண்ணும் வந்துளது. 'தேனெய்' என்பது தேன். 'தேனெய் போன் றினியசொல்லாள்' என்றனர் திருத்தக்க தேவரும்.

——

17. கொன்றை யுங்குருந் துங்குலக் கோடலு
முன்றி லேறிய முல்லையம் பந்தரும்
நின்று தேனிரந் தூத விரிந்தரோ
மன்றெ லாமண நாறு மருங்கினே. 12.

மருங்கின் (முல்லைநில) பக்கங்களில், கொன்றையும் - கொன்றை மரங்களிலும், குருந்தும் - குருந்து மரங்களிலும், குல - சிறந்த, கோடலும் - வெண்காந்தள் செடிகளிலும், முன்றில் - (ஆயரது) முற்றங்களில், ஏறிய-(கொடிபடர்ந்து) ஏறிய, முல்லை அம் பந்தரும்-முல்லையின் அழகிய பந்தலிலும், தேன் - வண்டுகள், நிரந்து-வரிசையாக, நின்று-நின்று, ஊத (அரும்புகளை) ஊத, விரிந்து - (அவை) மலர்ந்து, மன்று எலாம் - வெளியிடங்கள் எல்லாம், மணம் நாறும் - நறுமணம் கமழும். [அரோ - அசை]

—

18. நாற விண்டன நெய்தலு நாண்மதுச்
சேறு விண்டசெந் தாமரைக் கானமு
மேறி வண்டின மூன்றவி ழிந்ததே
னூறி வந்தொழு கும்மொரு பாலெலாம். 13.

ஒரு பால் எலாம் - (மருதநிலமாகிய) ஒரு பக்கம் எல்லாம், நாற - மணம் வீசும்படி, விண்டன - மலர்ந்தனவாகிய, நெய்தலும் - செங்கழுநீர்மலரிலும், நாள் மதுச்சேறு-புதிய தேனின் குழம்பு,விண்ட-அவிழ்ந்த, செந்தாமரைக் கானமும் - செந்தாமரைக் காட்டிலும், வண்டினம்-வண்டுக்கூட்டங்கள், ஏறி ஊன்ற - ஏறி அழுந்த, இழிந்த தேன் - (அதனால்) வழிந்த தேன், ஊறி வந்து ஒழுகும் - ஊற்றாக வந்து ஒழுகும்.

—

19. கோடு டைந்தன தாழையுங் கோழிருண்
மோடு டைந்தன மூரிக் குவளையுந்
தோடு டைந்தன சூகமுங் கற்பகக்
காடு டைந்தன போன்றுள கானலே. 14.

கானல் (நெய்தல் நிலத்திலே) சோலையில், கோடு - சங்குகள், உடைந்து அன - உடைந்து கிடப்பதைப் போன்ற, தாழையும் - வெண்தாழையும், கோழ் இருள் மோடு - செழிப்பான இருளின் வயிறு, உடைந்து அன - பிளந்து கிடப்பதைப்போல், மூரிக் குவளையும் - (இதழ்களில்) பிளவை உடைய கருங் குவளையும், தோடு-இதழ்கள், உடைந்தன-மலர்ந்தனவான, சூகமும் - நீர்ப்பூக்களும், கற்பகக்காடு - கற்பகச் சோலைகள், உடைந்தன போன்று உள - மலர்ந்தன போன்று இருந்தன.

"கோடுடை தாழை கொழுமடலவிழ்ந்த வால் வெண்சுண்ணம்" என்னும்மணிமேகலையடியில், வெண்டாழைமலர் அவிழ்வதைச் சங்குடைவதற்கு நிகராய்ச் சாத்தனாரும் கூறியிருக்கின்றார். கருமை பெருமை என்பனபோன்ற கொழுமை எனும் பண்புச்சொல்லும் கோழ் என நின்று புணர்ந்தது. மூரி என்பது பிளவுஎன்னும் பொருளில் இங்குப்பெயர்ச்சொல்லாய் நின்றது. இருளின் வயிறு பிளந்ததைப்போல் கருங்குவளை மலர்ந்தன என்றுரைப்பது இல்பொருளுவமையாம்.

—

20. நீல வால வட்டத்தி னிறங்கொளக்
கோலும் பீலிய கோடுயர் குன்றின்மே
லாலு மாமழை நீண்முகி லார்த்தொறு
மாலு மாமயி லாலுமோர் பாலெலாம். 15.

ஓர் பால் எலாம் (குறிஞ்சிநிலத்தின்) ஒரு பக்கம் எல்லாம், கோடு உயர் குன்றின்மேல் - சிகரம் உயர்ந்த மலையின்மேல், ஆலும் - அசைகின்ற, மா மழை - மிகுந்த மழையைத் தாங்கிய,நீள்முகில்-பெரிய மேகம், ஆர்த்தொறும் - சப்திக்கும்போதெல்லாம், நீல ஆலவட்டத்தின் - நீல நிறமான விசிறியின், நிறம் கொள - தன்மைபோல், கோலும் - விரிந்த, பீலிய- தோகையையுடையனவாய், மாலும் - களிக்கும், மாமயில் - சிறந்த மயில்கள், ஆலும் - கூவிக் கூத்தாடும்.

'நீல......பீலிய' எனும் தொடர், நீல நிறமுடைய விசிறியைப்போல் விரியும் தோகையையுடையனவாய், எனப் பொருள் படும். ஆலல் என்பதற்கு ஆடுதல் என்றும் ஒலித்தல் என்றும் இரு பொருள்களுள.

—

21. நக்க முல்லையு நாகிளங் கொன்றையு
முக்க தாதடர் கொண்டொலி வண்டறு
வெக்க ரீர்மணற் கிண்டி யிளம்பெடைப்
பக்க நோக்கும் பறவையோர் பாலெலாம் 16.

ஓர் பால் எலாம் (முல்லைநிலத்தின்) ஒரு பக்கம் எல்லாம், பறவை - சேவற் கோழி, நக்க - (சிரித்தன போல்) மலர்ந்த, முல்லையும் - முல்லை மலரும், நாகு இளம் கொன்றையும் -மிகவும் இளமையாகிய கொன்றையும், உக்க - சொரிந்த, தாது - மகரந்தம், அடர் கொண்டு - (தன் மேல்) அடரப்பெற்று, வண்டு ஒலி அறு - வண்டுகளின் ஒலி நீங்காத, ஈர் எக்கர் மணல்-குளிர்ந்த மேடிட்ட மணலை, கிண்டி - குடைந்து, இளம்பெடைப் பக்கம் - (தனது) இளம் பெண் கோழி இருக்கின்ற பக்கத்தை, நோக்கும் - பார்க்கும்.

பூந்தாது பறவைகளின்மீது அடர்ந்து படியும் என்னும் கருத்தைச் சிந்தாமணிக் காந்தருவதத்தையார் இலம்பகம் 156, 157, 158 ஆம் செய்யுள்களில் திருத்தக்கதேவர் அளவிலாப் புலமையோடு காட்டியுளர். பெடையிருக்கும் பக்கம் பறவை பார்ப்பதற்குக் காரணமும் அச்செய்யுள்களில் ஒருவாறு காணலாம். ஆனால் தேவர் கூறிய பறவை குயில். அது காஞ்சிமலரின் பைந்தாது போர்த்ததால் கிளிபோன்று தோன்றியதென்றும் அக்காரணத்தால் அதனைவிட்டுப் பெண்குயில் பிரிந்துபோயிற்றென்றும் அன்னவாறுபோகுமதைச் சேவல்நோக்கி யழைத்ததென்றும் அங்குக் கூறப்பெற்றிருக்கின்றன. இச்சூளாமணிச்செய்யுள் வருணிப்பது முல்லைத்திணை. முல்லைக்குரிய புள்ளினம் கானங்கோழியும் கவுதாரியுமாதலால் இங்குக் குறித்த பறவையைக் குயிலென்று கொள்வதற்கில்லை. கோழியெனவே கொள்ளல் வேண்டும். கோழி பச்சையாயின் ஒருவாறு மயிலை யொக்கும். எனின் தன்னை மயிலெனமயங்கிப் பெடைக்கோழியகலாவண்ணம் சேவல் நோக்கியதுபோலும். அல்லாக்கால்,இச் செய்யுட்குப் பிறிதொரு பொருளுமுரைக்கலாம்:—

ஓர் பால் எலாம் - ஒரு பக்கமெல்லாம், நக்க-(சிரித்தன போன்று) மலர்ந்த, முல்லையும் - முல்லை மலர்களும், நாகு இளம் கொன்றையும் - மிகவும் இளமையான கொன்றையும், உக்க - சொரிந்த, தாது - மகரந்தம், அடர்கொண்டு - அடர்ந்து, வண்டு ஒலி அறு - (அதனை உண்பதற்கடைந்த) வண்டுகளின் ஒலி நீங்காத, எக்கர் ஈர் மணல் - குளிர்ந்தமேடடைந்தமணலை, பறவை - ஆண்வண்டு, கிண்டி - குடைந்து, இளம் பெடை - (தனது) இளம் பெண்வண்டு (முதலில் உண்ணுமாறு) பக்கம் - (அது இருந்த) பக்கத்தை, பார்க்கும் - பார்த்துக் காத்திருக்கும்.

'பறவை தாதுண்ட வண்ணம் பட்டினிப் பரிவுதீர்ந் தான்' என்னும் சிந்தாமணியடியில் 'பறவை' என்ப

தற்கு நச்சினார்க்கினியர் 'வண்டு' என உரை கூறுகின்றார் பெடைக்கூட்டித் தானுண்ணுந்தன்மை வண்டிற்குளது. "புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்" என்றார் புகழேந்திப்புலவரும்.

---

22. துள்ள ருக்கவுட் கொண்டு சுரும்பொடு
கள்ள ருதசெந் தாமரைக் கானகத்
துள்ள ருதுதைந் தோகையி ரட்டுறப்
புள்ள ருதுபு லம்பின பொய்கையே. 17.

பொய்கை - (மருதநிலத்திலுள்ள) பொய்கைகளில், புள் - பறவைக்கூட்டங்கள், சுரும்பொடு - வண்டும், கள் - மதுவும், அருத - நீங்காத, செம்தாமரைக் கான கத்துள் - செந்தாமரைக் காட்டினிடையே, அருது - ஓயாமல், உதைந்து - தாக்கித்தாக்கி மீண்டு, ஓகை இரட்டுற - களிப்பு மிகுதியாக, துள் அருக் கவுள் கொண்டு - துள்ளுதல் அடங்காத தம் கன்னத்தினால், அருது - இடைவிடாமல், புலம்பின - ஒலித்தன.

'கானகத்தே புள் கவுள்கொண்டு புலம்பின' என்று பொருள் முடியும். கவுள் என்றது இங்குப் பறவையின் கதுப்பாகிய அலகைக் குறித்துநின்றது. உதைதல் - தாக்கி மீளுதல், பறவை மீனைக் காணுந்தோறும் நீரைத் தாக்கி மீண்டு வருதலாம். துள் என்பது முதனிலைத் தொழிற்பெயர், புள் ஒலிசெய்யுங்கால் அலகு அசைதலைக் குறிக்கின்றது.

---

23. வெண்மு ளைப்பசுந் தாமரை மென்சுருண்
முண்மு ளைத்திர ளோடு முனிந்துகொண்
டுண்மு ளைத்தில வன்ன முழக்கலாற்
கண்மு ளைத்த தடத்த கழியெலாம். 18.

கழி எல்லாம் (நெய்தல்நிலத்திலுள்ள) நீர்க்கழிகள் எல்லாம், முள் முளை திரள் - முள் முளைகளின் திரளையுடைய, பசும்தாமரை - இளம் தாமரையின், மெல் சுருள்ஓடு - மெல்லிய சுருள்களோடு, முனிந்து கொண்டு - கோபித்துக் கொண்டு, உள் (அவைகளுக்கு) உள்ளே, வெண்முளை - வெண்மையான முளையைப்போல், இளஅன்னம் - இள அன்னங்கள், முளைத்து - தோன்றி, உழக்கலால் - (மிதித்து) உழக்குவதால், கள் - தேனானது, முளைத்த - பாய்ந்த, தடத்த - இடங்களை உடையன.

"கழி எல்லாம், முள்முளைத் திரள் (உடைய) பசும் தாமரை (யினது) மெல் சுருளோடு முனிந்து கொண்டு, (அவைகளுக்கு) உள் இள அன்னம் வெண்முளை (போல்) முளைத்து உழக்கலால், கள் முளைத்த தடத்தன" என்று சொற்களைக் கொண்டு கூட்டி இச்செய்யுட்குப் பொருள் காணவேண்டும். மென்சுருண் முண்முளைத்திரளோடு" எனும் தொடரில் 'ஒடு' எனும் விகுதியையும் பிரித்துச் 'சுருள்' என்பதினோடு கூட்டினோம்.

அன்னமிதிப்பத் தேன்வழியு மென்னும் கருத்தை "அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல் போய்ச் செந்நெல் விளைக்குந் திருநாடா" என்னும் நளவெண்பாவிலும் காணலாம். அன்னம் தாமரையோடுற்ற முனிவிற்குக் காரணம் கம்பர் கூறியுள்ளார். அக்காரணத்தை,

> சுளியு மென்னடை தோற்க நடந்தவர்
> அளிகொள் சீறடி யொத்தன வாமென
> விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
> நளின மேறிய நாகிள வன்னமே

என்னும் பாசுரத்தில் காண்க. தனது நடை தோற்க நடந்த மாதர்களுடைய பாதங்களைப் போன்றிருக்கின்றன இத் தாமரைமலர்கள் எனச் சினந்து அப்பாதங்களின்பாலுள்ள பகைமை அவைகளுக்கு உவமையாயுள்ள பொருள்மீதாகிலும் தீர்த்துத் தன் சினமாற நினைத்தனபோல் அன்னம் அம் மலர்களை மிதித்ததாம்.

தாமரைமலர்க்குள் அன்னம் புகுந்துதோன்றும் தோற்றம், அம்மலரினிடையே ஒரு வெண்ணிற முளை யுண்டாயது போன்றிருக்கும் உவமை பொருத்தமானதே.

---

24. காந்த ளங்குலை யாற்களி வண்டினங்
கூந்தி ளம்பிடி வீசக் குழாங்களோ
டேந்து சந்தனச் சார லிருங்கைம்மா
மாந்தி நின்றுறங் கும்வரை மாடெலாம். 19.

வரைமாடு எலாம் - மலைப்பக்கங்களில் எல்லாம்;— இரும் கை மா - பெரிய துதிக்கையுடைய யானைகள், ஏந்து சந்தன சாரல் - உயர்ந்த சந்தன மரங்கள் அடர்ந்த சாரல்களில், கூந்து இளம் பிடி - கூந்தலையுடைய இளம் பெண்யானைகள், களி வண்டு இனம் - (மதநீர் பருகவரும்) களித்த வண்டின் கூட்டங்களை, காந்தள் அம் குலையால் - காந்தளில் அழகிய கொத்துக்களால், வீச - ஓட்ட, மாந்தி - (இன்பம்) நுகர்ந்து, குழாங்களோடு - கூட்டத்தோடு, நின்று உறங்கும் - நின்று உறங்கும்.

---

25. தார்செய் கொன்றை தளித்ததண் டேறலுண்
டேர்செய் கின்ற விளம்பு லிருங்குழைக்
கார்செய் காலை கறித்தொறு மெல்லவே
போர்செய் மாவினம் பூத்தண் புறணியே. 20.

பூ தண் புறணி - அழகிய குளிர்ச்சிபொருந்திய முல்லை நிலத்திலே:—கார் செய் காலை - கார்காலத்தில், மா இனம் - மான் கூட்டங்கள், தார் செய் - மலர்களை அரும்பிய, கொன்றை - கொன்றைமரங்கள், தளித்த - சிந்தின, தண் தேறல் உண்டு - குளிர்ந்த தேனை உட்கொண்டு, ஏர்செய்கின்ற - அழகாய் வளர்ந்திருக்கின்ற, இளம்புல் - இளம்புல்லின், இரும் குழை - சிறந்த இலைகளை, கறித்தொறும் - கடிக்கும்போது, மெல்லவே - மெல்ல, போர் செய்ம் - (ஒன்றோடொன்று விளையாட்டாக) போர் செய்யும்.

புல்மேயும்போது மான்கள் தம்முள் விளையாட்டாக முட்டிக்கொள்ளும் என்பது இச்செய்யுளின் கருத்து. போர் செய்ம். என்பதில் செய்யும் எனும் வினைமுற்று ஈற்றுயிர்மெய் ஏகி 'செய்ம்' எனநின்றது.

யாப்பிலக்கணம்

அசை

[9-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள் அடிகளால் நடக்கும்; அடிகள் சீர்களின் சேர்க்கையால்ஆகும்; சீர்கள் அசைகளால் அமையும்; அசைகளுக்கு ஆதாரமாயமைவதுஎழுத்து. எழுத்துக்கள் ஒலிக்கும் அளவைப் பொருந்தியிருக்கின்றது அசைகளின் அமைப்பு. அவ்வளவினை மாத்திரை என அழைப்பர். எழுத்துக்கள் அசைகளாகின்ற தன்மையை நன்கு உணர்வதற்கு அவைகளின் ஒலி மாத்திரையை ஐயமற உட்கொள்ளவேண்டும். ஆதலின் இதுபற்றி இரண்டாம் ஆண்டு முதலில் யாம் இலக்கணப் பாடங்களில் வரைந்துள சிலவற்றை ஈண்டு மீண்டும் வரையலாகின்றோம் :—

ஒலியால் ஆவது எழுத்து. அ ஆ இ ஈ போன்றவைகளும், க் ங் ச் ஞ் போன்றவைகளும் க கா கி கீ, ச சா சி சீ போன்றவைகளும் எழுத்துக்கள். இப்படி எழுத்துக்கள் என்று சொல்லத்தக்கவை எவை? அ என்னும் சப்தம், ச் என்னும் சப்தம், சு என்னும் சப்தம் எழுத்துக்கள். இதுபோன்றே பிற சப்தங்கள் அல்லது ஒலிகளே நாம் அறிந்தவாறு மற்ற எழுத்துக்களும் ஆகின்றன. அ ச் சு என்னும் இம் மூன்று ஒலிகளுஞ் சேர்ந்தால் அச்சு, என்ற அர்த்தத்தைத் தரக்கூடிய வொரு சொல் ஆகும். இப்படிச் சொற்கள் ஆகக்கூடியனவா யிருக்கின்ற ஒலிகளையே எழுத்தென்று சொல்லவேண்டும். தும்மல் இருமல் கையோடு கைதட்டல் இவைகளெல்லாம் ஒலிகளே ஆனபோதிலும் அந்த ஒலிகளைச் சேர்த்து அர்த்தம் தரக்கூடிய வார்த்தை ஒன்றும் உண்டாக்க முடியாதாகையால் இவைகளும் இவைபோன்ற பிற ஒலிகளும் எழுத்துக்கள் ஆகா. ஆகையால், மொழி அல்லது சொல் உண்டாவதற்கு முதற்காரணமாய் எந்த எந்த ஒலிகள் இருக்கின்றனவோ அவ்வொலிகளே எழுத்து என்பதற்கு உரியதாகும். இந்த எழுத்துக்கு உரியதாயிருக்கின்ற ஒலி பாஷைக்குப் பாஷை வேறுபடும். ழ் என்கின்ற ஒலி 'மூழ்கு' என்ற சொல்லிற்குக் காரணமாயிருப்பதால் இதைத் தமிழ்ப்பாஷைக்குரிய வொரு எழுத்தென்போம். ஆங்கிலத்தில் ழ் அல்லது ழ ழா வரிசையிலுள்ள சப்தத்தோடு சேர்ந்த வார்த்தைகளே இல்லை. ஆகையால் இந்த ழ் வரிசை ஒலி ஆங்கிலபாஷையில் எழுத்தாகாது; தமிழ்ப் பாஷையில் ஆகும். அவ்விதமே f என்ற ஒலி fat, calf என்பனபோன்ற அர்த்தத்தைத் தருகின்ற ஆங்கிலமொழிகளுக்குக் காரணமாயிருப்பதால் அது அப்பாஷையின் எழுத்தாகும்; தமிழிலே இந்த ஒலி சேர்ந்த வார்த்தைகள் இல்லையாகையால், f என்ற ஒலி தமிழில் எழுத்தென்று வராது.

மொழிக்கு முதல்காரணமா யிருக்கக்கூடிய ஒலி எழுத்து. தமிழ் எழுத்துக்களைப் பற்பல தன்மை நோக்கிப் பற்பல வகைகளாய்ப் பிரிப்பார்கள். அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள். க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்ற மேலே புள்ளியிட்ட பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள். உயிரெழுத்துக்களில், அ இ உ எ ஒ என்ற ஐந்து எழுத்துக்களும் குறில்கள். இவைகளை விடச் சிறிது நீண்டு உச்சரிக்க வேண்டுமாகையால், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ, என்னும் ஏழெழுத்துக்களும் நெடில்கள். மெய்யெழுத்துக்கள் எல்லாம் ஒரே அளவாகத்தான் உச்சரிக்கப்படும். ஆகையால் மெய்யெழுத்துக்களுள் குறில் நெடில் என்கின்ற பேதம் இல்லை. ஆனால், உச்சரிக்கின்ற அழுத்தத்தில் வித்தியாசம் மெய்யெழுத்துக்களுக்குள்ளே இருக்கின்றது. க் ச் ட் த் ப் ற், என்ற ஆறு எழுத்துக்களையும் உச்சரிக்கும்போது அழுத்திச் சொல்லவேண்டியிருக்கின்றது; ஆகையால் அவைகளுக்கு வல்லினம் அல்லது வல்லெழுத்துக்கள் என்று பெயர். ங் ஞ் ண் ந் ம் ன் என்ற எழுத்துக்களை மெதுவாக உச்சரிக்கவேண்டும். ஆகையால் அந்த ஆறுஎழுத்துக்களுக்கும் மெல்லினம் அல்லது மெல்லெழுத்துக்கள் என்று பெயர். மற்ற, ய் ர் ல் வ் ழ் ள், என்ற ஆறு எழுத்துக்களும் வல்லினம்போல் அவ்வளவு அழுத்தாமலும் மெல்லினத்தைப்போல் அவ்வளவு மெதுவாக அல்லாமலும் நடுத்தரமாக உச்சரிக்கப்படும். ஆகையால் இவைகளுக்கு இடையினம் அல்லது இடையெழுத்துக்கள் எனப் பெயர்.

உயிரெழுத்துக்களுள் உச்சரிக்கின்ற நேரம் அல்லது அளவில் வித்தியாச மிருக்கின்றது; அழுத்துவதில் வித்தியாசமில்லை. மெய்யெழுத்துக்களை உச்சரிக்கும் நேரம் எல்லாவற்றிற்கும் ஒன்றுதான். ஆனால் எப்படி அழுத்தி உச்சரிக்க வேண்டும் என்ற விதத்தில் மெய்யெழுத்துக்கள் வித்தியாசப்படும்.

ஃ, என்பது உயிருமன்று, மெய்யுமன்று; அதற்கு ஆய்தவெழுத்து என்று பெயர்.

இனி, க கா கி கீ, ச சா. என்றபடி ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுங் கூடி ஒலிக்கின்ற எழுத்துக்களுக்கு உயிர்மெய் எழுத்துக்கள் என்று பெயர். $18 \times 12 = 216$ உயிர்மெய் எழுத்துக்கள் இருக்கின்றன. க்+அ=க, என்று ஆகிறதே ஒழிய, அ+க்=க, என்று ஆகவில்லை. அதாவது மெய்யின்மேல்தான் உயிர் வந்து சேர்கின்றது. க என்று சொல்லும்போது அதில் க் என்னும் மெய்யெழுத்தின் ஒலியும் அ என்னும் உயிரெழுத்தின் ஒலியும் சேர்ந்திருப்பதை உச்சரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். அப்படிப் பார்க்கும்போது மெய்யெழுத்தின் சப்தமே முதலில் தொனிப்பதையும் அறிவீர்கள். ஆனாலும் இவைகளை உயிர்மெய், என்று முதலிலே உயிரைத்தான் சொல்லிப் பெயர் வைத்திருக்கிறார்களே யொழிய மெய்யுயிரெழுத்து என்று அவைகளை அழைப்பதில்லை.

உயிர்மெய் எழுத்துக்களில் உயிர் மெய் ஆகிய இரண்டும் இருப்பதால், உயிர்மெய்க் குறில்கள் ஐந்தும் உயிர்மெய் நெடில்கள் ஏழும் ஒவ்வொரு வரிசையிலுமாகப் பதினெட்டு வரிசையிலும் உண்டு. மெய்யெழுத்துக்களின் பிரிவின்படி ஆறு வரிசை வல்லின உயிர்மெய்யாகவும், ஆறுவரிசை மெல்லின உயிர்மெய்

யாகவும், ஆறு வரிசை இடையின உயிர்மெய்யாகவும் இருக்கும்.

இனி எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய கால அளவிற்கு மாத்திரை என்று பெயர். ஒரு மாத்திரை என்பது, ஒருதரம் கைநொடிப்பது அல்லது கண் இமைப்பது செய்வதற்கு வேண்டிய நேரம். இப்படிப் பார்த்தால், க் ங் போன்ற மெய்யெழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய மாத்திரை அரைமாத்திரை, அதாவது ஒருதரம் கண்கொட்டுவதற்குள் அல்லது கையை நொடிப்பதற்குள் இரண்டு மெய்யெழுத்துக்களைச் சொல்லிவிடலாம். எந்த இனமாயிருந்தாலும் மெய்யெழுத்துப் பதினெட்டிற்கும் அரைமாத்திரை தான். குறிலுக்கு மாத்திரை ஒன்று. நெடிலிற்கு இரண்டு. உயிரெழுத்திற்கும் உயிர்மெய் எழுத்திற்கும் உச்சரிக்கும் அளவில் வித்தியாசமில்லை. அ, என்பது உயிர்க்குறில்; அதற்கு மாத்திரை, ஒன்று. ப என்பது உயிர்மெய்க் குறில்; அதற்கும் மாத்திரை ஒன்றேதான். ப்+அ என்று சேர்ந்து ஆயிருப்பதால் ஒன்றரை மாத்திரை உண்டோ என்று எண்ணப்படாது. நெடிலும் அவ்வாறே உயிராயிருந்தாலும் உயிர்மெய்யாயிருந்தாலும் இரண்டே மாத்திரை பெறும்.

எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய கால அளவை மாத்திரை என்பர். ஒருதரம் கையைநொடிப்பதற்கு அல்லது கண்ணைக் கொட்டுவதற்கு வேண்டிய பொழுது ஒரு மாத்திரை. அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிர்க்குறில் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை பெறும். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழு உயிர்நெடில்கள் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரை பெறும். க் ச் ட் த் ப் ற் என்ற ஆறு வல்லின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை பெறும். ங் ஞ் ண் ந் ம் ன் என்ற ஆறு மெல்லின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரையே பெறும். அவ்விதமே ய் ர் ல் வ் ழ் ள் என்ற ஆறு இடையின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் பெறுவது அரை மாத்திரையே. ஆகவே, மெய்யெழுத்துப் பதினெட்டிற்கும், அது எந்த இனமாயிருந்தாலும், தனித்தனி மாத்திரை அரை. உயிர்மெய் எழுத்துக்களும் க கி கு கெ கொ, என்பனபோல் வல்லெழுத்து மெய்களின்மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், ம மி மு மெ மொ. என மெல்லின மெய்யெழுத்துக்களின் மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், வ வி வு வெ வொ, என இடையின மெய்யெழுத்துக்களின் மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், குறிலாயிருந்தால் ஒரு மாத்திரையும், அப்படியே நெடிலாயிருந்தால் இரண்டு மாத்திரையும் பெறும். ஆதலால் உயிர் எழுத்துக்களுக்கும் அவ்வுயிர் எழுத்துக்கள் சேர்ந்து ஆன உயிர்மெய் எழுத்துக்களுக்கும் உச்சரிக்கின்ற அளவில் வித்தியாசம் இல்லை. ஃ என்னும் ஆய்த எழுத்திற்கு மாத்திரை அரை.

மேற்சொன்ன அளவுகள் அவ்வந்த எழுத்துக்களுக்கு இயற்கையாய்ப் பொருந்திய மாத்தரைகள் ஆகும். ஆனல் சிற்சில சமயங்களில் சில எழுத்துக்கள் தமக்கு இயற்கையாயுள்ள அளவிற்கு அதிகமாக வேனும் குறைவாகவேனும் ஒலிப்பதும் உண்டு. அதிகமாக ஒலிக்கும்போது அவ்வெழுத்து அளவெடுத்து இருக்கின்றதென்றும் குறைவாக ஒலிக்கும்போது குறுகி இருக்கின்றதென்றும் சொல்வர். முன்னது அளபெடை என்றும், பின்னது குறுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

செய்யுள்களில், "மாஅல் யானையொடு மறவர் மயங்கி" என்பனபோல் வந்திருக்கக் காணலாம். இதனில், 'மால்' என்றிருக்கவேண்டியது 'மாஅல்', என வந்திருக்கின்றது. 'மா' என்ற எழுத்திற்குப்பின் வந்திருக்கின்ற அ என்ற எழுத்து அச்சுப்பிழை அன்று. 'மா' என்ற நெட்டெழுத்தை இன்னும் சிறிது நீட்டி உச்சரித்தால்தான் இந்தச் செய்யுளடியின் ஓசை சரியாயிருக்கும் என்று காட்டுவதற்கு அடையாளமாக வந்திருக்கின்றது அந்த அ வென்னும் எழுத்து. ஆகையால், மா, என்ற உயிர்மெய் எழுத்தில் பின்னதாக உச்சரிக்கப்படுகின்ற ஆ என்னும் உயிர் நெடில், தனக்குரிய இரண்டு மாத்திரை போதாமல் மூன்று மாத்திரை வேண்டியதாயிற்று. அதாவது 'மாஅல்' என்று சொல்லும்போது சாதாரணமாக 'மால்' என்பதைப்போல் உச்சரிக்காமல், மா என்ற எழுத்தை மூன்று தரம் கைந்நொடிக்கின்ற நேரத்தினளவு உச்சரித்து அப்புறம் ல் என்ற எழுத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆதலால், 'மாஅல்,' என்பதில் அ என்ற எழுத்து, மா என்னும் எழுத்திலுள்ள ஆ என்ற உயிர் தன்னளவுக்கு அதிகப்பட்டு ஒலிக்கும் என்று காட்டவந்திருக்கின்றதே அல்லாது, அந்த அ விற்கு இங்கே தனி உச்சரிப்பு இல்லை. இப்படி வந்திருக்கின்ற சொற்களைப் படிக்கும்போது 'மால்' என்று நீட்டிப்படிக்க வேண்டுமே யல்லாது 'மா அ ல்' என்று மூன்று எழுத்துக்களையும் உச்சரிக்கப்படாது. இவ்விதமாக உயிர் நெடில் எழுத்துக்கள் இரண்டு மாத்திரைக்கு மேற்பட்டு உச்சரிக்கவேண்டிய அவசியம் இசையைக் கருதி நேர்கின்றபோது அவை அளவெழுந்து இருக்கின்றனவென்று சொல்வோம். அவைதாம் உயிரளபெடை. உயிர்நெடி லெழுத்துக்கள் மாத்திரந்தான் அளபெடுக்கும்; அவ்வாறு அளபெடுக்கும்போது அதற்கு அடையாளமாய் அந்த அளபெடுத்த நெடிலுக்கு இனமாகிய குற்றெழுத்தைப் பக்கத்தில் எழுதிக் காட்டுவார். "சுடர்த்தொடீஇ கேளாய்" என்ற இடத்தில், ஈ என்ற உயிர்நெடில் அளபெடுத்திருக்கின்றது. ஆகையால் அதற்கு இனமாகிய குற்றெழுத்து இ பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஐ, ஔ, என்ற இரண்டு நெடில்களுக்கும் நேரே குற்றெழுத்துக்கள் இல்லாதபடியால் அவை அளபெடுக்கும்போது, ஐ ஆனல் பக்கத்தில் அதற்கினமான இயும், ஔ ஆனல் அதற்கினமான உவும் எழுதப்படும். உயிர்க் குற்றெழுத்துக்கள் அளபெடுக்கா.

இவ்விதமே மெய்யெழுத்துக்களும் சில, ஒவ்வொரு சமயம் தம் அரைமாத்திரைக்கு அதிகப்பட்டு ஒரு மாத்திரையாக, இசைநயங் கருதிச் செய்யுள்களில் உச்சரிக்கப்படுவதுண்டு. அவைகளுக்கு ஒற்றளபேடை என்று பெயர். மெய் எழுத்திற்கு ஒற்று என்ற ஒரு பெயர் உளது. ஆகையால் மெய்யளபெடை என்பதற்குப் பதிலாய் ஒற்றளபெடை என்று வழங்குவார். "கண்ண் கருவிளை" என்றும், "பொன்ன் பொறிசுணங்கு" என்றும் வரக்கூடும். கண், பொன்,

என்ற சொற்களிலுள்ள ண் ன் என்னும் மெய்யெழுத்துக்களை அரை அரை மாத்திரையோடு நிறுத்திக் கொள்ளாமல் ஒரு மாத்திரை அளவு உச்சரிக்கவேண்டும் என்பதைக்காட்ட அந்த அந்த மெய்யெழுத்தே அதன் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. "கண் ண்" "பொன் ன்" என்று இரண்டுதரம் ண், ன் என்ற எழுத்துக்களை உச்சரிக்கப்படாது. எல்லா மெய் யெழுத்துக்களும் அளபெடுக்கா. ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள், என்ற பத்து மெய்யெழுத்துக்கள்தான் அளபெடுக்கும். ஃ என்ற ஆய்த எழுத்தும், "எஃஃ கிலங்கிய கையார்" என்று அளபெடுக்கக் கூடும்.

எழுத்துக்களின் மாத்திரையை இங்குக் கூறி வருகின்றோம். நெட்டெழுத்துக்களுக்கு உரிய மாத்திரை இரண்டாயிருந்தாலும் அவை சிற்சில சமயம் அளவெழுந்து மூன்று மாத்திரையளவு உச்சரிக்கப் பெறும். நான்கு மாத்திரையும் பெற்றாலும் பெறலாம். மெய்யெழுத்துக்களில் சில தமக்குரிய அரை மாத்திரைக்கு அதிகப்பட்டு ஒரு மாத்திரையளவு உச்சரிக்கப்பெறும். இவ்வாறு உயிரெழுத்து மாத்திரை மிகுந்து ஒலிப்பதற்கு உயிரளபெடை என்றும், மெய்யெழுத்து மிகுந்து ஒலிப்பதற்கு ஒற்றளபெடை என்றும் பெயர்.

இனி, சில எழுத்துக்கள் சில சமயங்களில் தமக்கு உரிய மாத்திரையைவிடக் குறைந்து ஒலிக்கவும் கூடும். அப்பொழுது அவைகளுக்குக் குறுக்கம் என்று பெயர்.

அவ்வாறு குறுகக்கூடிய எழுத்துக்கள் ஆறு:—

இ உ ஐ ஔ, என்ற நான்கு உயிரெழுத்துக்களும், ம் என்ற மெய்யெழுத்தும், ஃ என்ற ஆய்த வெழுத்தும்.

ஐ, ஔ, என்ற இரண்டு எழுத்துக்களும் உயிர் நெடில்களாதலால் அவை ஒவ்வொன்றிற்கும் உரிய மாத்திரை இரண்டு. ஆனால் நாம் பேசும்போது இந்த இரண்டு மாத்திரையளவு இவைகளுக்குக் கொடுத்துப் பேசுவதில்லை. இது என்ன எழுத்து என்று கேட்டால், இது ஐ, இது ஔ என்று அந்த எழுத்துக்களின் பேரைச் சொல்கின்றபோதுதான் அந்த இரண்டு எழுத்துக்களுக்கும் சுயமாகவுள்ள இரண்டு மாத்திரையையுங்கொடுத்து உச்சரிப்போம். அப்படிக்கல்லாமல் இந்த இரண்டு எழுத்துக்களும் வார்த்தைகளில் சேர்ந்து உச்சரிக்கப்படுகின்ற அளவைக் கவனித்துப்பாருங்கள்.தையல்,வைரம்,ஐவனம், மைனா, என்று ஐ, என்னும் எழுத்து முதலில் வருகின்ற சில வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்துக்கொண்டு கவனத்தோடு உச்சரித்துப் பார்த்தால் நெடிலைப்போல் இரண்டு மாத்திரை யில்லாமல் குறைந்து ஒலிப்பதை நம் காது உணரும். வை என்பது வா, என்பதைப்போல் ஒரு நெடில். ஆனபோதிலும் வாரம் என்பதைவிட வைரம் என்பது குறைந்தொலிக்கவில்லையா? அப்படியே தீயல்,என்பதைவிடத் தையல் என்பது குறைந்தொலிக்கும். மைனா, என்பதில் மை என்பது நெடில்தான், னா என்பதும் நெடில்தான். ஆனால் அந்த மைனா என்னும் வார்த்தையைச் சொல்லும்போதே, முதலில் இருக்கிற ஐ என்னும் ஒலியைவிடப் பின்வரும் ஆ என்னும் ஒலி அதிகமாய் உச்சரிக்கப்படுகின்றதன்றோ. ஏனெனில், தமிழ் மொழிகளைப் பேசும் முறையில் ஐ என்னும் நெடில் எவ்விடத்திலும் குறுகித்தான் ஒலிக்கும். வாரம் வைரம் வரம், என்ற மூன்று வார்த்தைகளையுஞ் சொல்லிப்பார்த்தால், வை என்ற எழுத்து, வா என்ற நெடிலைப் பார்க்கிலும் சிறிது குறைந்தும், வ என்ற குறிலைப்பார்க்கிலும் சிறிது அதிகமாகவும் ஒலிப்பது தெரியவரும். ஏனெனில், இதன் மாத்திரை இங்கு நெடிலைப்போல் இரண்டுமில்லை; குறிலைப்போல் ஒன்றும் அன்று. இரண்டிற்கும் நடுவாக அது ஒன்றரை மாத்திரையே அடைந்திருக்கின்றது.

வைரம் தையல் ஐவனம் மைனா, என்று முன் எடுத்துக்கொண்ட சொற்களெல்லாம் ஐஎன்னும் எழுத்து, சொல்லிற்கு முதலில் வரும் சொற்கள். அங்கே ஐ இரண்டு மாத்திரையினின்று குறைந்து ஒன்றரை மாத்திரை பெற்றது. இனி, சொற்களுக்கு நடுவிலேனும் கடையிலேனும் வரும்போது ஐ ஒன்றரை மாத்திரைகூடப் பெறாமல் குறிலைப்போல் ஒரு மாத்திரையே பெற்று ஒலிக்கும். மறையோன் என்ற சொல்லையும் மறவோன், என்ற சொல்லையும் உச்சரித்துப் பாருங்கள். றைக்கும் றக்கும், ஒலிஅளவில் ஒன்றும் வித்தியாசம் தோன்றாது. அப்படியே, முதலை, முதலி என்ற இரண்டு சொற்களையும் உச்சரித்துப் பார்த்தால், லி என்னும் குறில் எவ்வளவு நேரம் உச்சரிக்கப்படுகின்றதோ அவ்வளவுதான் லையும் உச்சரிக்கப் படுவதைக் காது உணரும். ஆகையால் ஐ என்னும் எழுத்து, சொல்லிற்கு நடுவிலாவது கடையிலாவது வரும்போது அதன் மாத்திரை ஒன்றே.

இப்படித் தனக்குரிய இரண்டு மாத்திரையைக் கொள்ளாமல் வார்த்தைக்கு முதலில் ஒன்றரையும்,நடுவிலும் கடையிலும் ஒன்றுமாகிக் குறுகுகின்ற ஐ என்னும் எழுத்தை இலக்கணநூல்களில் அஃகிய ஐ, என்றேனும் ஐகாரக்குறுக்கம் என்றேனும் அழைப்பர். ஐ என்ற எழுத்து அந்த எழுத்தின் பேரைக்குறித்து நிற்கின்றபோது தவிர மற்றெல்லா விடங்களிலும் குறுகியே ஒலிக்கலாகும்

ஔ என்ற எழுத்தும் அப்படியே. ஔவை, வௌவால், மௌவல், என்ற இடங்களிலெல்லாம், அது இரண்டு மாத்திரை பெறாமல் ஒன்றரை மாத்திரையளவே உச்சரிக்கலாகும். இதற்கு அஃகிய ஔ என்றேனும் ஔகாரக் குறுக்கம் என்றேனும் பெயர். ஔகாரம் மொழிக்கு முதலில் மாத்திரமே வரும். இடையிலும் கடையிலும் வராது. ஐகார ஔகாரக் குறுக்கங்களின் இலக்கணம் தெரிந்திருப்பது யாப்பிலக்கணம் கற்பதற்கு மிகவும் அவசியமாகும்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[11-வது பக்கத் தொடர்ச்சி]

(உணர்வு-Perception)

புலன்கள்.

தனியாக ஒரு புலனைமட்டும் உள்ளுவது அருமை. பல புலன்களும் இயைந்தே ஒவ்வொருபோது ஒவ்வொரு மனநிலையாக விளங்குகின்றன. ஆனால்அம் மனநிலையை ஊன்றி உள்நோக்கி ஆராய்ந்தால் பல புலன்களில் ஒரு புலனை வேறுபிரித்துக் கருத்தாகப் பார்க்கலாம். அவ்வாறுஉள்நோக்காகப்பார்க்கும்போது ஒவ்வொரு புலனாகத்தோன்றும் அவையே, பல புலன்கள் ஒன்றாகச் சேர்ந்து இயைந்தனவாக விளங்குகின்றன. ஒரு புலன் என்று முதல் தோன்றிய விடத்திலே ஆராய்ச்சியின் பயனாகப் பல புலன்கள் தோன்றுகின்றன. எலுமிச்சம்பழமும் கன்னற்கட்டியும் தண்ணீரும் கலந்த எலுமிச்சைத் தீநீரின் சுவையை, ஒரு புலனாகவே முதலில் உணர்கின்றோம். பின்னே, இச் சுவைப்புலனை ஆராயும்போது, இனிப்பு, புளிப்பு, குளிர்ச்சி, என்ற பலவகைப் புலன்களைப் பிரித்துணர்கின்றோம். இவ்வாறே பல நிறங்களையும் வேறு பிரித்துணர்கின்றோம். மயிலின் நிறத்தில் சிறிது பசுமையும் சிறிது கருமையும் (நீலத்தைக் கருமை என்றே தமிழ்நூலோர் கூறுதல் காண்க. நீல மலரைக் கருநெய்தல் எனப் பாடுதல் காண்க. வெண்மைக் கெதிர் மறையான இருட்டுநிறத்தைக் கறுப்பு என்று வழங்குவோம்) தோன்றுகின்றன. கிளிப்பச்சையில் பசுமைநிறத்தோடு சிறிது மஞ்சள்நிறமும் தோன்றக் காண்கிறோம். ஆனால் வேறு சிறு புலன்களோ, இவ்வாறு வேறுபிரித்தறியமுடியாதபடி தனித்துவிளங்குகின்றன. வானவில்லின் ஒரு முனையில் தோன்றும் செம்மையில் வேறேதேனும் நிறக்கலப்புத் தோன்றுகின்றதா? கலப்பில்லாத தனிச் செம்மையே அங்குத் திகழ்கின்றது. ஆனால் வேறு சில புலன்கள் எமக்குத் தனிப்புலனாகத் தோன்றுவதாலேயே அவற்றை வேறு பிரித்தறிய இயலாதென்று இயம்ப ஒண்ணாது. சிலமருந்துகளின்சுவைகளை வேறுபிரித்தறிய எம்மால் இயலாது. ஆனால், மருந்துநூல் வல்லார் அதனை எளிதில் வேறுபிரித்துணர்வர். இசைப்பண்ணில் எழும்பும் பலவகையான ஒலிகளை ஓரொலி என்றே எண்ணி நாம் துய்க்கின்றோம். ஆனால் இசைவாணர் அவ்வோரொலியைக் குரல் என்றும் விளா என்றும் உழை என்றும் துத்தம் என்றும் தராம் என்றும் இளி என்றும் கைக்கிளை என்றும் எளிதில் வேறு பிரித்துணர்வார்கள். ஆதலின் அஃதஃதில் வல்லவர்கள் தத்தம் பயிற்சிக்கேற்பப் பல புலன்களை வேறு பிரித்துணர்வர் என்பதாயிற்று. இவ்வாறு மக்களுடைய உட்காட்சி, ஒவ்வொருவரிடத்தும் அவரவர் அறிவையும் பயிற்சியையும் பொறுத்து வேறுபடுமானால் எதனை யாம் தனிப்புலன் என்போம்? எதனை யாம் கலவைப் புலன் என்போம்? ஆதலின் நமது துய்த்துணர்வு (Experience) மட்டும் போதாது.

நம்மிடத்துப் புலனை எழுப்பி எதிர்நிற்கும் தூண்டல்களாகின்ற வெளிப்பொருள்களின் இயற்கைத்தோற்றத்தை ஆராய்தல் வேண்டும். அவை நரம்புகளில் உண்டாக்கும் பலவகைக் கிளர்ச்சிகளை ஆராய்தல் வேண்டும். இவ்வாராய்ச்சியின் பயனாகக் கலவைப் புலன்கள் அனைத்தும் கலவைப்பொருள்களால் எழுகின்றன என அறிகின்றோம். எலுமிச்சத் தீநீரின் சுவையோ கலவைப்புலனாகும்; அதனைத் தூண்டிய தீநீரும், எலுமிச்சம்பழம் கன்னல் தண்ணீர் முதலியவை கரைந்து ஒன்றாகிய கலவைப்பொருளாகும். எலுமிச்சம்பழம், தண்ணீர்,கன்னல் முதலியவற்றைத் தனித்தனியே நாம் நாக்கிலிட்டுப் பார்த்தால் என்ன புலன்களை உணர்கின்றோமோ அவற்றைத்தான் அத் தீநீரின் சுவையை உண்ணோக்காக ஆராய்ச்சி செய்யும்போது பிரித்தறிகின்றோம்.

புறப்பொருளாம் தூண்டல்கள் இவ்வாறு உண்மையை விளக்குகின்றன. மேற்சென்று, புலன்களை எழுப்பும் நரப்புக்கிளர்ச்சியையும் நரம்பியக்கத்தையும் ஆராய்தல் வேண்டும். கலவைப் பொருளின் பலவகைத் தூண்டல்களில் ஒவ்வொன்றும் தனித்தனி ஒவ்வோர்வகையான புலனரப்பங்களை இயக்குவதைக் காண்கிறோம். எலுமிச்சைத் தீநீரில் உள்ள கன்னலோ இனிப்புப்புலன் நரப்பத்தை இயக்குகிறது; எலுமிச்சையோ புளிப்புப்புல னரப்பத்தை இயக்குகிறது. ஒவ்வொரு வகையான தனிப்புலனையும் எழுப்ப வெவ்வேறு புலனரப்பங்கள் உள்ளன என்று ஒரு சில ஆராய்ச்சிவாணர் முடிவுகட்டி யுள்ளார்கள். ஆதலினால், தனியே ஒரு தூண்டல் அளவாக நிற்கும் பொருளையும் கண்டு, அது தனியே ஒரு புலனரப்பத்தைத் தாக்குதலையும் அறிந்து, அதனாலெழுந்த புலனை எத்தகைய ஆராய்ச்சியாலும் பல புலன்களாகப் பிரித்துணர முடியாதென்பதையும்உணர்ந்தோமானால்,அவ்வாறெழுந்ததொரு புலனைத் தனிப்புலன் என்பதற்கு யாதுதடை. பலவகைத்தூண்டல்களால் பலவகைப்புலனரப்பங்களும் தாக்குண்ணுதலால் எழுந்த புலனானது, உண்ணோக்கால் ஆராய்ந்தபோது பல வேறு புலன்களாகவும் வேறு பிரித்து அறியப்படுமானால், முன் ஒன்றாய் இயைந்துதோன்றிய அப் புலன் கலவைப்புலனே யாகும்.

ஒவ்வொரு புலனரப்பத்திற்கும் தனிச் சிறப்பியக்கம் உண்டு. நமது தோலின்கீழ்க் குளிர்புல நரப்பமும், சுடுபுல நரப்பமும், நொப்புல நரப்பமும், உறுபுல நரப்பமும் என்பன பரந்துகிடக்கின்றன. இவை வெளிப்பொருள்களால் தாக்குண்டபோதுதான், குளிர்ச்சி, சூடு, நோவு (Pain) [நோய் என்பது பிணியையும், நோவு என்பது ஊற்றுத்துன்பத்தினையும் உலக வழக்கில் குறிப்பது காண்க] ஊறு (தொடுதல் Touch) என்ற புலன்கள் எழுகின்றன. குளிர்புல நரப்பத்தைக் கண்டறிந்து அதனுள் சுடுமுள்ளொன்றைத் தைத்தால் நாம் எதிர்பார்ப்பதுபோலத் தூண்டலுக் கேற்றபடி சூடு எழுவதில்லை. குளிர்புல நரப்பிற்கேற்றபடி குளிர்ச்சியே புலனாகின்றது.

ஆகவே இந்தப் புலன்கள் புனைரம்பைப் பொறுத்
திருக்கின்றன என்பதாயிற்று. இதனையே புலனரப்பத்
தனிச்சிறப்பாம் ஆற்றல்கள் (Specific energies
of Sensory neurones) என ஒரு சார் ஆராய்ச்சி
யாளர்கள் கூறுகின்றனர். இந்நரப்புத் தனிச்சிறப்பாம்
ஆற்றல்களின் வேறுபாடு எதனல் ஆபது என்று
இதுபோது சொல்ல இயலாது.

இவ்வாறு நரம்பியக்கம் எழுந்தபோது உள்ளத்தே
உணரும் புலன்கள் எழுகின்றன. எனவே நரம்பியக்
கம் ஒன்று; நாம் அறியும்புலன் முதலிய உள்ளத்தியக்
கம் ஒன்று. இவை இரண்டும் ஒன்றோ வேறோ யாமறி
யோம். நமது நரம்பியக்கம் இவ்வுள்ளத்தியகத்தினை
எழுப்பியோ, அல்லதுஉள்ளத்தியக்கமாக முதிர்ந்தோ
நிற்கின்ற இடமெது? எந்த நிலையில் இந்நரம்புக்
கிளர்ச்சி பாயும்போது நாம் புலனை உணர்கின்றோம்.
முன்மூளைப் புறணியில் உள்ள புலனெல்லையில் எழு
கின்ற கிளர்ச்சியின் பயனே புலனாகும். கண்ணிலும்
கண்ணரம்பிலும் இப்புலன்கள் எழுகின்றன என்
பதற்கில்லை. கண் நலம்பெற்ற ஒருவன், பின்னொரு
நோயால் அக்கண்ணையும் கண்ணரம்பையும் இழந்து
நின்றால், அவற்றை யிழந்தும், கனவிலும் உரு
வெளித்தோற்றத்திலும் பல காட்சிகளைக் காண்கி
றான். ஆனால் முன்மூளைப் புறணியில் உள்ள கட்புல
வெல்லை கெடாதிருத்தல் வேண்டும். இக் கட்புல
வெல்லை கெட்டிருக்குமாயின் கண்ணிருந்தும் பய
னில்லை; கண்ணரம்பிருந்தும் பயனில்லை; கனவிலும்
நனவிலும் நாம் ஒன்றும் காண இயலாது. ஆகவே
இடைநிலை நரப்புவடத்திற் குட்பட்டு, முன்மூளைப்
புறணியில் காணப்படும் புலனெல்லையின் செயலே
புலனாக முற்றுதல் வேண்டும். இப் புலத்தோற்ற
நிலைகள் வெவ்வேறாக நின்றன்றோ வெவ்வேறு
புலன்களை எழுப்புகின்றன இவ்வேறுபாடு எதனல்
ஆபது. புலப்பொறிகளையும் புலநரம்பையும் பொறுத்
தது இவ்வேறுபாடு என்பர் ஒரு சாரார். முன்
மூளையிற் புலவெல்லையின் எப்பிரிவில் வேண்டு
மானாலும் எப்புலனேனும் எழும் என்பர் பலநரம்பு
களும் ஒன்றுபோலவே விளங்குவதால் இவ்வேறு
பாடு அப்புலனரம்பில் உளதாகின்றது என்றியம்ப
இடமில்லை. முன்மூளைப் புறணியைப் (Cerebral
Cortex) பொறுத்த வேறுபாடென்றே இதனைக்
கூறுதல் வேண்டும். முன்மூளைப் புறணியில் தனித்
தனிப் புலவெல்லைகள் காணப்படுகின்றன அன்றோ?
எப்புலனும் எங்கேனும் இப் புலவெல்லையில் எழும்
என்றால் அவ்வெல்லையில் ஒவ்வொரு புலன் ஒவ்வோர்
இடத்தில்மட்டும் எழுவது எதனாலே என்க? அன்றி
யும்இணைப்பியைபு(Association of ideas)என்று
முன்னர்க்கண்ட உண்மையோடு இக்கொள்கை மாறு
படுதல் காண்க. கப்பல் என்ற பொருட்காட்சியும் அத
னைக் கண்டபோதே தந்தையார் குழந்தைக்குக் காட்
டிச் சொல்லும் கப்பல் என்ற சொல்லின் கேள்வியும்
குழந்தையின் உள்ளத்தே ஒன்றாய் இயைந்தபோது
பின்னொருகாலத்தே கப்பலைக் கண்டபோது கப்பல்
என்ற சொல்லும் நினைவுக்கு வருகிறது. இக்காட்சி
யையும் இக்கேள்வியையும் முதன்முறை துய்த்
துணர்ந்தபோது கட்புல வெல்லையிலும் செவிப்புல
வெல்லையிலும் நரப்புக்கிளர்ச்சிப் பாய்கிறது. செய்ந்
நிலத்தே கலப்பை உழுதபோது உழுத சாற்குறிநிலத்
தில் ஏற்படுவதுபோலக் கிளர்ச்சிபாய்ந்த கால்வாய்க்
குறிகள் முன்மூளையில் ஏற்படுகின்றன. காட்சியும்
(கப்பல்) கேள்வியும் (சொல்) உடன்எழுந்தபோது
காட்சியை எழுப்பும் நரப்புக்கிளர்ச்சி பாய்ந்த கால்வா
யும் கேள்வியைஎழுப்பும் நரப்புக்கிளர்ச்சி பாய்ந்த
கால்வாயும் ஒன்றாகத்தொடர்புண்டு விளங்குகின்றன.
இவ்வாறு பல நரம்புகள் ஒன்றாக இயைவதனால்
அன்றோ, நம் துய்த்துணர்வும் செய்திறனும் மாட்சி
மைப் படுகின்றன. முன்னைய காட்சியோடியைந்த
முன்னைய கேள்வியும் நரப்புக்கால்வாய் வழியாக
இயைந்திருப்பதால், பின்னே காட்சிமட்டும் எழு
கையில், கட்புல எல்லையிற்பாயும் கிளர்ச்சி முன்னைய
தொடர்புவழியே சென்று செவிப்புல எல்லையிலும்
பாய்ந்து முன்னைய கேள்வியை நினைப்பிற்குக் கொண்டு
வருகிறது. ஒவ்வொரு புலனுக்கும் ஒவ்வோர் எல்லை
இல்லையானால், இவ்விணைப்பியைபு ஏற்படுதல்
இயலாதன்றோ? முன் கண்டதன் குறி மூளையில்
தங்கி நிற்குமானால், அவ்விடம் கட்புல எல்லையாகவே
இருத்தல் வேண்டும். வேறு புலன் அங்கெழுதலாவ
தில்லை. காட்சி எழுந்த இடத்தில் முகர்ச்சி யெழுமா
னால், காட்சிக்குறி மூளையில் ஊன்றி நிற்றல் இயலா
தன்றோ? அவ்வாறு ஊன்றி நிற்காதபோது முன்னைய
காட்சியும் (கப்பல்) கேள்வியும் (கப்பல் என்ற சொல்)
இயைந்து பின் நினைப்பிற்கு வருவது எங்ஙனம் கூடும்.
ஆதலின் புலத்தோற்றங்கள் முன்மூளைப் புறணியின்
இயக்கத்தாலாவனவேயாம். புலத்தோற்றம் அவ்வியக்க
மேயாம் என்பாரும் உளர். முன்மூளையின் செயல்
கள் ஒவ்வொன்றும், அம் முன்மூளைப் புறணியின்
ஒவ்வொரு குறித்தஇடத்தில் நிலைபெற் றெழுகின்
றன. அவை அங்கு இடைநிலை பெற்று விளங்குகின்
றன என்பதாயிற்று (Localisations of cerebral
functions.)

முன்மூளைப் புறணியில் இருப்பன நரப்புப்
படைகள் அன்றோ? இந் நரம்புகளில், நரம்புக் கரு
வறை, (Cell bodies) நரம்பு நார் (fibres) கூடல்
வாய் (Synapses) என்ற உறுப்புக்கள் விளங்குகின்
றன. இங்கு இப் புலத்தோற்றம் எதன் செயலாக
எழுகின்றது? நரம்புநாரின் செயல் என்போமா?
நரம்புக் கிளர்சசியைப் பாய்ச்சும் கால்வாய்களாக
இந்நரம்பு நார்கள் விளங்குகின்றனவே யன்றி வேறு
எத்தொழிலும் உடையனவாகக் காணப்படவில்லை.
ஒரு நரம்புநார்க்கும் மற்றொரு நரம்புநார்க்கும்
வேற்றுமையில்லை யாதலின், வேறுபட்டிருக்கும்
புலன்கள் அவற்றின் செயலாக எழுதற்கிடமில்லை.
கருவறைகளின் இயக்கத்தின் பயனாகப் புலத்தோற்ற
முண்டாகின்றது என்போமா! கருவறைகள் நரம்
புக்கு உணவளித்துக் காத்தலையே தம் தொழிலாகக்
கொண்டு விளங்குகின்றன. கருவறைகளும் நரம்பு
நார்களும் எளிதில் களைப்படைவதில்லை. புலத்தோற்ற
மாம் செயல்களோ எளிதில் களைப்பூட்டுவனவாகும்.
ஆதலின் எளிதில் களைத்துப்போகும் கூடல்வாயிடை
எழுகின்ற செயல்களின் எதிரொளியே புலத்தோற்றம்
என்று சொல்ல இடமுண்டு. கூடல் வழியாக நரம்புக்
கிளர்ச்சி ஓடும்போது பலவகைத் தொடர்களையும் ஏற்
படுத்திக்கொண்டு போவதையும் அவ்வகையாக நம்
மறிவும் நம் செய்திறனும் வளர்வதையும் முன்னர்க்
கண்டோம். அவ்வாறுதான் உயர்நிலையிலுள்ள உயி
ருளிகள் ஏற்றமடைந்துள்ளன. கூடல்வாயில் தடை
ஏற்பட்டபொழுதுதான் அதன் எதிரொளியாக

உள்ளத்தியக்கம் எழக்காண்கிறோம். அப்போதுதான் உணர்வெழுகின்றது. தடை நீங்கியபோது அக் கூடல்வாய்வழியாக நரம்புக்கிளர்ச்சிகள் ஓடுமானால் அதனை நாம் உணர்வதில்லை. ஆதலின் கூடல்வாய் இயக்கமே புலத்தோற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும்.

இப்புலன்கள் எழுதற்குத் தூண்டல்களாய் எதிர் நிற்கும் பொருள்கள் நம்மேல் தாக்குதற்கேற்ற நிலைக் களன்களாகச் சில உறுப்புக்கள், கண்ணென்றும் காதென்றும் சிறப்புநிலை பெற்று விளங்குவதைக் கண்டோம். இவற்றை நமது முன்னோர் ஐம்பொறிகள் என்று எண்ணிவைத்தனர். பொறி என்ற சொல் பொதுவாகக் கருவியமைப்பை (Machine யந்திரம்) குறிக்கின்றதாதலின், கண் முதலியவற்றைப் புலப்பொறிகள் என வழங்தல்தகும். இப்புலப் பொறிகளில் புலனரம்பின் முடிவு அமைந்திருக்கின்றது. ஈதே இன்றியமையாததாம். இதனை அறுத்துவிட்டால் புலப்பொறியால் ஒரு பயனுமில்லை. அஃதில்லாதபோது மூளையானது புலனை உணர்வதில்லை. அப்புலனுக்கேற்ற இயக்கமும் எழுதற்கிடமில்லை. புலனரப்பின் விழுதுகள் (Axons) மெல்லிய நூல்கள்போல் பிரிந்து பரவி நிற்கின்றன. புலனரம்பு இவ்வாறு பலவாயாகவிரிந்து எதிர்கொள்வதாலே தூண்டும் வெளிப்பொருகள்களால் எளிதில் தாக்குண்டு செயலுறுகின்றன. புலப்பொறியில் புலனரம்பன்றிச் சிறப்புநிலைப் புலநரப்பங்களும் (Specific Sensory neurones) புலக்கருவிப்பொறிகளும் (Accessory apparatus) உள்ளன. இப் புலநரப்பங்கள் ஒவ்வொரு வகையான தூண்டல்களால்மட்டும் தாக்குண்டு தூண்டற்கேற்ற ஒவ்வொருவகைப் புலன்களைமட்டும் எழுப்புவதால் இவற்றைச் சிறப்புநிலைப் புலநரப்பும் என வழங்குகின்றோம். குளிர்ச்சியால்மட்டும் தாக்குண்ணும் குளிர்புல னரப்பமும் சூட்டால்மட்டும் தாக்குண்ணும் சுடுபுலனரப்பமும் உள்ளன என்று கண்டோம். அவை அவ்வாறு சிறப்புநிலைபெற்ற புலநரப்பங்கள் அல்லவோ! இவற்றைக்கண்ணிலும் காதிலும் மூக்கிலும் நாக்கிலும் எளிதில் காணலாம். அவை இவ்வாறு மிக்க அரணிடையே வீற்றிருக்கின்றன. புலக்கருவிப் பொறிகளோ, பொருள்கள்தாக்கியபோது அத்தாக்கலைத் தெளிவாக உள்ளே செலுத்துவதற்குத் துணைக்கருவியாக நிற்கின்றன. இப்புலக்கருவிப் பொறிகளில் கண்ணும் காதும் உயர்நிலை யடைந்தன ஆகும். ஆதலின் முதலில் கண்களையும் கட்புலனையும் ஆராய்வோம்.

தனிப்பாடல்கள்

நவாலி. க. சோமசுந்தரம் பிள்ளை.

(நாமகள்)

விரைகொள் கமல மலர்மிசை
விரவு கமலை யிருசரண்
உரைகொள் தமிழி னுரைசெய
உறுதி யடைவ ரடியரே. 1.

நாவே பரியங்க மாகநல நாமிசையே
பாமேவு மைந்தியனும் பஞ்சணையாய்—நாமேவு
வாய்மை யுரையே மணிவிளக்கா யின்சொல்லே
சேய்மை கமழுஞ் செழுவிரையாய்—தூய்மையுறு
வெண்பாக் கவரி யிரட்டமிளி ராசியச்
செம்பாவை நல்லுரைகள் செப்பிடவே—இன்பக்
கலிப்பா விசைபாடக் காமருவஞ் சிப்பா
சலிப்பின்றித் தாள்கள் வருட—ஒலிக்கும்
மருட்பாச் சிறுவினைகள் செய்ய மகிழ்ந்தே
அருட்பா லறிதுயில் கூரும்—தெருட்பாவை
வெள்ளைக் கலையாள் மிருகலையாள் மேகலையாள்
கொள்ளைக் கலையாள்நற் கூடலையாள்—தெள்ளுதமிழ்
மாதரசி பாத மலர்பரசி வாழ்வோரே
பூதலத்துக் கோரிரண்டு கண். 2.

தாயே கலைமகளே சங்கத் தமிழ்பொழியும்
ஆயே யென்னன்பே யென்னுருயிரே—நீயேதான்
என்னு விருந்துகவி ஈவதுவும் ஈய்ந்தபின்பு
முன்னுகக் கேட்பதுவு மோர். 3.

தேனோங்கு வெண்கமலத் திருத்தவிசி னிருந்தே [பும்
திசையோங்கு தமிழ்மொழியைத் தேசமெங்கும் பரப்
கானோங்கு மலர்க்குழலி கலைவாணி ஞானக்
கஞ்சமலர்ச் சேவடியென் னெஞ்ச மகலாவே. 4.

என்னுயிரை யுயிருள்ளே எரிகின்ற விளக்கை
எழில்விளக்கந் தருசுடரைச் சுடரினிலே கலந்து
மன்னுமனல் போலறிவிற் றோன்றுாது மறைந்து
வளர்கின்ற பேரறிவை வாக்கினிலே பொருந்திப்
பன்னுபல கலைநிலைகள் பேசுவிக்குங் கிளியைப்
பங்கையத்தி னோதிமத்தைப் பசுந்தோகை மயிலைத்
தன்னையெழு மையுமெனக் குத்தருகின் றமும்மைச்
சங்கநிதி யைத்தொழுது தங்குதுயர் களைவாம். 5.

நாமிசை யமரும் பூமிசைப் பாவாய்
நந்தா விளக்கே சிந்தா மணியே
அமுதினு மினிக்கும் அருந்தமி ழுன்னைப்
ஒன்று வேண்டுவ னுரைசெய வேண்டும்
பண்டும் பண்டும் பயின்ற பிறப்பில்
என்னு மிசைநீ மன்னிவீற் றிருக்க
எத்தவ முயன்றே னறியே னெனக்கு
அத்தவம் யாதென வறைகுதல் வேண்டும்—இனிநான்
எடுக்கு மெடுக்கும் பிறவிக டோறும்
கொடுக்கும் நற்றவம் கூடி
அடுக்கு நின்னருளை அடைந்திடு மாறே. 6.

மஞ்சார் குழலும் மதிபார் நுதலும் வரிவிழியும்
அஞ்சார் முகமு மமுதச் செவ்வாயு மமைந்தவம்மை
நஞ்சா ரமுதென நாட்டுசொற் றேவியை நான்பணிந்தேன்
அஞ்சே னிருவினைக்கும் பிணிக்கு மல்லற் கூற்றுக்குமே. 6.

ஒன்று மறியாதவெனைப் புலவனிவனென
வுலக முரைக்குமாறு
நன்று திருவருள்புரிந்த வெண்கமல
நாயகியே நல்லோர்நாவி
னென்றுமுயர் மணிவிளக்கே யுரைக்குயிரே
பெஞ்ஞான்று மொழியாச்செல்வம்
வென்றிபுகழ் வீடருளு மெய்ப்பொருளே
யுன்னடியே விரும்பினேனே. 8.

உள்ளுறை விளக்கே போற்றி
உலப்பிலொண் பொருளே போற்றி
தெள்ளிய வமுதே போற்றி
தேன்மொழிப் பாவாய் போற்றி

வள்ளவெண் கமலை போற்றி
மலைமகள் கண்ணே போற்றி
வெள்ளைவெண் கலையாய் போற்றி
விரைமலர்த் திருத்தாள் போற்றி. 9.

தாயே கலைவாணி தண்டமிழைத் தந்தெனது
வாயே நிறைந்த மலர்க்கொடியே—நீயேதான்
இப்பிறப்பே யன்றி யெழுபிறப்பு மென்னுடைய
வைப்பாகி நாமேல் வதி. 10.

தேனும் பாலுங் கன்னலு மொன்றாய்ச் சேர்ந்திட்டால்
மானுந் தெய்வ மொழிபயில் வெள்ளை மலர்மானை
வானும் மண்ணு மென்றும் வணங்கு மாதாவை
நானு மென்றுங் கும்பிடு மாறு நயந்தேனே. 11.

வெண்டாமரை மேலே வீற்றிருக்கும் மெல்லியலே
கண்டா லினிக்குமிரு கட்கரும்பே—பண்டொருநாள்
நீர்மே லெதிரேறும் நேரிழாய் என்னுடைய
நாமேலே யேறி நவில். 12.

தேனார் கமலத் திருவடியென் சென்னிமிசை
தானாகச் சூட்டித் தமிழருளும்—வானோர்
அறியா வமுதையென்ற னுருயிரிற் றூன்றிப்
பிறியா வொளியையுற்றேன் பெற்று. 13.

சிவப்பொருளைச் சேர்க்குஞ் செழுந்தமிழைச் செய்யுந்
தவப்பெருக் கிலாவெனக்குந் தந்து—பவக்கடலை
நீந்தப் புணையாகி நின்றாளை நெஞ்சமே
சாந்துணையும் நாவிற் றரி. 14.

நீட்டுங் கலைத்தமிழ்ச் செல்வமெல்லா மென்றன்சிந்தையிலே
காட்டுங் கலைப்பெரு மாட்டியை யாணவக் காரிருளை
ஓட்டுங் கலைமதிமா முகத்தாளை வெள்ளோ திமத்தை
வாட்டும் பிணிதவிர்த் தாளை யெப்போதும் வணங்குதுமே.

வெண்டா மரைப்பூவோ வேதன் மணிநாவோ
தண்டாத் தமிழ்ப்புலவர் பாடலோ—கண்டு
முருக்கும் மதுரமொழி மொய்குழலே நன்றாய்
இருக்கும் பொருளே திசை. 16.

முத்த நகைச்சி முளரித் தலைநிலைச்சி
பத்தர் வலைச்சியிசைப் பாணிச்சி—முத்தமிழ்சேர்
வாய்ச்சி கலைச்சியுரை வாணிச்சி சேணிச்சி
ஆய்ச்சி யெனையாளு வாய். 17.

வெள்ளை வெண்டோட்டு முட்டாள்
விரைகமழ் கமலப்போதில்
தெள்ளமு தொழுக்கும் ஞானச்
செழுமதி போலவாழும்
கள்ளவிழ் மலர்ப்பூங் கோதைக்
கருங்குழல் கருணை வெள்ளம்
உள்ளுதோ றுள்ளப் பள்ளத்
தோடியே நிறையு மன்றே.

அறிவன வறிந்த தெள்ளியோர் குழுவி
லடியனு மொருவ னுயமர
மறுவறு கருணை வலியவந் தருளி
வாக்கினில் மன்னிவீற் றிருந்து
குறைவறு புலமைக் குளிர்தமிழ்ப் பாடல்
கூறிடு மாற்றலுங் கொடுத்த
வெறியுறு கமல நறுமலர்க் கோயில்
மெல்லியல் பொன்னடி போற்றி.

கல்வியில் வல்ல பெரியவர் கூடுங்
காமரு சபையினு மெனது
சொல்வலி நாட்டிப் பெருமிதங் கூட்டுந்
தூமலர்ப் பசுங்கொடி யல்லு
மெல்லியு மென்ற னுவிலே துயிலு
மியலிசை நாடகத் தமிழாள்
அல்லியங் கமல தமனியப் பீடத்
தணங்கினை வணங்கிடு வாமே.

திருவொழுகிய வருள்வடிவினை
தேனொழுகிய தமிழ்மொழியினை
மருவொழுகிய சுரிகுழலினை
மதியொழுகிய நறுநுதலினை
வேலொழுகிய சேல்விழியினை
வேயொழுகிய தோளிணையினை
பாலொழுகிய வானுருவினை
பண்ணொழுகிய யாழேந்தினை
வெண்டாமரை மலர்மேவினை
மெய்ப்புலவர்கள் நாமேவினை
தண்டாமரை புரைதாளினை
தமியேனுரை புகுகாதினை.

உள்ளத் தொளியே யுறுதுணையே நாவினமர்
தெள்ளித் தெளித்ததமிழ்த் தெய்வமே—கள்ளவினை
போமாறு ஞானம் புகுமாறு பேரின்ப
மாமாறு முன்னின் றருள்.

முன்னேபுரிந்த தவத்தால் வெளிப்படும் முத்தமிழின்
மின்னே யுரைக்கு விளக்கே யுயிருக்கு மெய்யுயிரே
பொன்னே புலனறியா நுண்மைச் செம்புலப்
[பூங்கொடியே
அன்னே யுனையன்றி வேறிலை யேழைக் கறிமுகமே.

இந்தப் பிறப்பில் எனதுபுன்னா மீமிசையே
வந்துகவி சொல்லும் வகையேபோல்—பந்தவினை
கூட்டும் பிறப்பின்னுங் கூடுமேல் நாவினின்று
பாட்டருள வேண்டும் பரிந்து.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
தமிழ்நாட்டு சோல் ஏஜெண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0)

டிப்போ, பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire,' Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanagaramet its end onthe field of Talikota,in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF, BENOY KUMAR SARKAR, M.A., **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT:

Snap-shots of World movements in Commerce, Economic Legislation Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA, The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England,how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI.

or a Critical Review of the Hindu Empire of Maharashtra by VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M.A., Ph. D., Dacca.

by V. V. OAK B. A., S. T. C. Pp. 1 to 24X168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ. மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றாம் புஸ்தகம் 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு- ஆ. நா. கன்னையா 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. ஸிவிக்ஸ் துரைத்தன விளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது — S. சுப்பிரமணிய ஐயர் 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால் பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன் - S. சீனிவாசையர்.... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **The New Era Story Books Series.** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II " **As. 4.**
23. Book III " **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B.A., L.T., **As. 3**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A. L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo, M. A. **As. 6.**
27. **The Clay Cart** **As. 6**

V. P. Charges, Extra of the Prices.

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்களுடன்)—மூன்று பாகம் ...	ரூ. 18	அ. 8
தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary	10	0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

A Momentous Book
By
MUDALIAR C. RASANAYAGAM c. c. s.
WITH A FOREWARD BY
Prof. S. KRISHNASAMI IYENGAR, M.A.,

An authentic History of North Ceylon particularly of Jaffna, based on Epigraphic Linguistic, Archeological researches is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Isand by the Europeans and it reads like a romance.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0.
V. P. Charge Extra

KALANILAYAM
Purasawalkam, Madras.

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)
வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம் ...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்	ரூ.	5.
ஆரண்ய காண்டம் ...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம் ...	ரூ.	4-8.
சுந்தர காண்டம் ...	ரூ.	5.

(வி.பி. செலவு வேறு)
மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“ கலா நிலயம் ”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜிநோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32.

மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறு கதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

சென்றவாரம் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி ஐயரும் வேறு சில தொண்டர்களும், கிடங்குத்தெருவில் ஜவுளி பகிஷ்காரம் செய்யும்படி ஜனங்களைத் தூண்டினார்கள் என்று சென்னைப் போலீசாரால் கைது செய்யப்பெற்று 6-மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றனர். இப்பொழுது பகிஷ்கார இயக்கத்தின் தலைமையை ஸ்ரீமான் K. பாஷ்பமையங்கார் ஏற்றுள்ளார். இவர் ஸ்ரீ நாகேச்வரராவ்பந்தலு அவர்களுடன் இனிச் செய்யவேண்டிய வேலையைப்பற்றி ஆலோசனை செய்து வருகின்றார் என்று தெரிகின்றது.

***

காலண்டர்வரவு:—இரங்கோன் நவீனகதா புத்தகசாலையினர் நமக்கு இவ்வருடக் காலண்டர் ஒன்றை அனுப்பியுள்ளனர். அதில் இங்கிலீஷ் தமிழ்த் தேதிகளும் இராகுகாலமும், விடுமுறை நாட்களும் குறிக்கப்பட்டுள்ளன. இக்காலண்டர் மிகவும் உபயோகமானது.

***

தேவகோட்டை
ஸ்ரீ சொர்ணமூர்த்தி பெண்பாடசாலை.

மதுரை. ஸ்ரீ மீனாட்சி செவிட்டூமைப் பாடசாலைத் தலைமையாசிரியர் S. நடராஜ பிள்ளை பி. எ. கொடுத்த நற்சாக்ஷிப்பத்திரம் :—

இன்று எனக்கு ஸ்ரீ சொர்ணமூர்த்தி பெண்பாடசாலையைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ் வொப்புயர்வற்ற பாடசாலையானது நம் மாணவிகளுக்கு உண்மைக் கல்வியை வெகு சிறப்பான முறையில் ஊட்டுகின்றது. மற்றப் பெண்பாடசாலைகளில் ஆண்களுக்குக் கற்பிக்கும் கல்வியே பெண்களுக்கும் வழங்கப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துகிறது. ஆனால் இப்பாடசாலையில் பெண்களின் தனிக் குணத்திற்கும் அவர்கள் செய்யவேண்டிய முக்கிய வேலைகளுக்கும் உதவியாகவும், அவர்கள் புதல்விகளாயும், மனைவிமார்களாயும், தாய்மார்களாயும் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஏற்றவாறும், தங்கள் இல்லங்களுக்கு முடிசூடா அரசிகளாகவிருந்து சந்தோஷத்திற்கும் சமாதானத்திற்கும் உறைவிடமாய்ச் செய்வதற்குச் சாதனமாகவும் மிகுந்த உயர்வான முறையில் கல்வி கற்பிக்கப்படுகின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து இப்பள்ளியிற் பயிலும் மாணவிகளுக்கு அறக் கல்வியுடன் தேக சுகத்தோடு வாழ்வதற்கு ஏற்ற சுகாதார விதிகளும் காவிய ரசங்களறியும் ஆற்றலும் உண்டாகுமாறு கல்வி வழங்கப்படுகின்றது.

இப்பள்ளியை நிறுவி நம் பெண் மக்களுக்குப் பேருபகாரம் செய்து நம் சமூகத்தின் மாபெருங் குறையைத் தீர்க்க வழிதேடிய உண்மை அறிவாளராகிய வெ. அழ. அழகப்ப செட்டியார் அவர்களுக்குப் பொதுவாகத் தமிழ்நாடும், சிறப்பாகச் செட்டி நாடும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. இப்பாடசாலை தமிழ் நாட்டின் திலகமெனச் செழிக்குமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

ஸ்தாபகர் அவர்களின் கருத்துப்படி இப்பள்ளியை நடத்தும் வேலையைச் சாது முருகனார் அவர்கள் ஒப்புக்கொண்டு திறமையுடன் நடத்தி வருவதும் அன்னாரின் பெரும் பாக்கியமாம். தன்னலம் அறவே நீத்த திரு. முருகனார் போன்ற உண்மை நல்லாரே இந்நாளில் தேவை.

இப்பள்ளியும் இதன் ஸ்தாபகரும், இதை நடத்திவரும் தன்னலமற்ற ஆசிரியர்களும் இனிதே வாழுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வைத்திய ரத்ன பண்டிட்
டி. கோபாலா சார்லு அவர்களின்
ஒப்புயர்வற்ற மருந்துகள்.

பிளேக்	காலரா
ஹைமதி பானகம் = = சததௌத கிருதம். 1 செட் மருந்துகளின் விலை ரூ. **2-2**	கற்பூராதி யரிஷ்டம் = = விஷூசிசஞ்சீவினி வடி. 1 செட் மருந்துகளின் விலை ரூ. **1-2**
பிருகுவடி	**விருஷ்ய யோகா**
வெள்ளை, வெட்டை நோய்களை போக்கச் சிறந்த மருந்து. பூரண குணத்திற்கு மருந்து. விலை ரூ. **6-12**	நரம்புத்தளர்ச்சி, பேடித்தனம், பலஹீனம் இவைகளைப் போக்குவதில் பெயர்பெற்ற மருந்து. பூரனகுணத்திற்குமருந்து விலை ரூ. **5-0**

எல்லா விடங்களிலும் கிடைக்கும். விபரகாட்லாக் இனம்.

தந்தி விலாசம்:— "பண்டிட்" டேலிபோன் நே:- 2191

தபாற் பெட்டி நே: — 287.

ஆயுர்வேத ஆஸ்ரமம்,
151, கோவிந்தப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம் !

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

KALANILAYAM. REG. NO. M, 2324.

புதிய பதிப்பு! வெளிவந்து விட்டது !!

ஸ்ரீ புகழேந்திப் புலவர் அருளிச்செய்த

நளவெண்பா மூலமும்

(தெளிபொருள் விளக்க—அகல உரையும்)

(செய்யுள் தலைப்பு, பதவுரை, கருத்துரை, விரிவுரை, விசேஷஇலக்கண இலக்கியக் குறிப்புகளுடன் கூடியது.)

இந் "நளவெண்பா" வின் உரை அமைப்பு மாணவர்க்கும் மற்றவர்க்குந் தெற்றென விளங்கும். 413-ம் செய்யுள் "நல்லரசனுகிய நளனை நோக்கிப் புல்லரசனுகிய புட்கரன் 'க்ஷேமந்தானு' நன்று வினவினுனெனல்" என்பது போன்ற தலைப்புகள் ஒவ்வொரு செய்யுட்கும் வரையப்பட்டுள்ளது. கருத்துரையும் அதனடியில், அதனதன் சூத்திரமும் இலக்கணக் குறிப்பும் உள.

முழு காலிகோ பையிண்டு விலை ரூ. 2

V. S. T. சாமி கம்பெனி,

புரசைபாக்கம் ஐரோட், வேப்பேரி, சென்னை.

இனம்! இனம் !!

வைத்திய வித்தியா

யெளவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனு பஜார், மதராஸ்.

Estd. NATIONAL 1906

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-9, **Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.

(2) The Company has never contested a claim on a technicality.

(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to:— R. G. DAS & CO., *Managers.*

T. ANANTACHARI, B.A.,

Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,

Madras Branch, Loane Square,

Broadway, Madras.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம் பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$. டாக்டர் B. S. மல்லையா M.B, & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணு 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஷை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத் தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது விலை ரூ. 1–8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)